

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 126 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 30 – சனிக்கிழமை 16 டிசம்பர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 126: Thiruvalluvar Year - 2054 - Karthigai 30 - Saturday 16 December 2023 - Dak 10 Pages ₹ 5.00


# மாநாட்டில் அணிவிக்கும் மணிமுத்து மாலை!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

இளைஞரணி மாநில மாநாடு நடைபெறும் திருநெல்வேலி மாவட்டத்தில் 80 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மக்கள் வேளாண்மையை நம்பித்தான் வாழ்கின்றனர். தாமிரபரணி ஆறு மாவட்டத்தின் பாசன வசதிக்கும் வேளாண்மைக்கும் பெரிதும் பயன்பட்டு வருகிறது. சிற்றாறு, மணிமுத்தாறு, சீராறு ஆகியனவும் நெல்லை மாவட்ட வேளாண்மைக்கு உதவிக்கரம் நீட்டுகின்றன.

நெல்லை மாவட்டத்துக்கு, வடகிழக்குப் பருவ மழைதான் அதிகப் பயன் விளைக்கிறது. இந்த மழையின் உதவியால்தான் நெல் சாகுபடி வெற்றிகரமாக இங்கே நடைபெறுகிறது. தென் மேற்குப் பருவ மழை குறுகிய கால கார் நெல் விளைச்சலுக்கு உதவியாக இருக்கும்.

திருநெல்வேலி என்பது அழகான பெயர். "நெல்" என்ற சொல் இந்த ஊரின் பெயரிலேயே நடுநாயகமாக விளங்குகின்றது. எனவே நெல்லை மாவட்டத்தில் நெல் விளைச்சல் முக்கியமாக இருப்பது பொருத்தமானதுதானே? இந்த மாவட்டத்தின் மொத்த தானிய உற்பத்தியில் 70 சதவிகிதம் நெல்தான். நெல் தவிர பருத்தி, கம்பு, சோளம், எள், ராகி போன்ற தானியங்களும் பயிராகின்றன.

நெல்லைச் சீமையில் நீர்வளம், நிலவளம் பற்றிக் குறிப்பிட்டேன். மாநாட்டில் கூடிடும் இளைஞர்களின் மன வளம் பற்றியும் - அவர்களின் மகிமை பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டாமா? அவர்கள் நல்கிடும் தூய தொண்டு பற்றி அறிந்து கொள்ளல் வேண்டாமோ?

அங்கு நடைபெறும் இளைஞர் அணியின் மாநில மாநாட்டிற்கான ஏற்பாடுகள் எல்லாம் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. இது இளைஞர் அணி மாநாடு என்பதாலோ என்னவோ, இந்த முறை அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, அதற்கான பணிகள் எல்லாமே மிகவும் விறு விறுப்புடனும், விரிவாகவும் நடத்தப்பட்டு வருவதைக் காண்கிறேன்.


மாநாடு நடைபெறும் இடத்தை தேர்வு செய்யவும், அங்கே பந்தல் அமைப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவும் இளைஞர் அணியின் செயலாளரும், மாநாட்டின் தலைவருமான தம்பி மு.க. ஸ்டாலின் இரண்டு மூன்று முறை நெல்லைக்குச் சென்று வந்துள்ளார். நெல்லை மாவட்டத்திலே உள்ள கழக முன்னணியினர், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தம்பி கருப்பசாமி பாண்டியன் மற்றும் கழக முன்னணியினர் – வழக்கறிஞரும், நெல்லை மாநகர மேயருமான ஏ.எல்.சுப்பிரமணியம், மத்திய இணை அமைச்சர் ராதிகா செல்வி, மாநில அமைச்சர்கள் மைதீன் கான், பூங்கோதை, சட்டப் பேரவை உறுப்பினர்கள் மாலைராஜா, அப்பாவு மற்றும் சுப சீத்தாராமன், ச. தங்கவேல். எஸ்.எஸ். மைதீன், வரவேற்புக் குழுத் தலைவர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கா.முத்துராமலிங்கம், வரவேற்புக் குழுச் செயலாளர்கள் வே. கோமதி நாயகம், யூ.எஸ். டி.சீனிவாசன், க.ரவி மற்றும் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள் அந்த மாவட்டத்திலே உள்ள இளைஞர்களின் ஒத்துழைப்போடும் பந்தல் வேலைகளில் முழுமையாக ஈடுபட்டு மாநாட்டுக்காக; கொட்டகைகள் அல்ல; கோட்டைக் கொத்தளங்களை அமைத்து வருகிறார்கள்.

## கலைஞர் கடிதம்

மாநாட்டு வேலைகளை மேற்பார்வையிடச் சென்ற தம்பி ஸ்டாலினுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பே, மாநாட்டிற்கு வருகை தருவோருக்கு அளிக்கப்படும் மகத்தான வரவேற்பையொத்ததாக இருந்ததென்று என்னிடம் தெரிவித்தார்கள். மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக தம்பி ராஜா முன்னிலையேற்றிட இளைஞர் அணியினரின் எழுச்சி மிகு அணிவகுப்பு நடைபெறவுள்ளது. அணிவகுப்பிலே கலந்து கொள்வோர் கழகத்தின் இரு வண்ணக் கொடியேந்திதான் கலந்து கொள்ள வேண்டுமென்று அறிவிக்க வேண்டுமா; என்ன? கொடிக்காடுகளே வீதிகளில் காண முடிகிறதே!

ஒவ்வொரு மாவட்டக் கழகத்தின் செயல் வீரர்களின் கூட்டங்கள் கூட்டப்பெற்று, அந்தந்த மாவட்டங்களின் சார்பில் நெல்லை மாநாட்டில் கலந்து கொள்ள செல்வதற்கான ஏற்பாடுகள் எல்லாம் வகுக்கப்பட்டுள்ளன. என்னைச் சந்திக்கும் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்கள் தங்கள் மாவட்டத்திலிருந்து 200 பேருந்துகள் புறப்படவுள்ளன, 100 பேருந்துகளுக்கு முன் தொகை கட்டப்பட்டுள்ளது என்றெல்லாம் தகவல் தெரிவித்து வருகிறார்கள். அவர்கள் சொல்கின்ற செய்திகளை கேட்கும்போது, இத்தனை பேருக்கும் நெல்லைச் சீமையிலே இடம் இருக்குமா என்ற ஐயம் எனக்கேற்பட்டுள்ளது.





மாநாட்டுப் பந்தல் 800 மீட்டர் நீளம், 400 மீட்டர் அகலத்தில் அமையவுள்ளது. சுமார் ஐந்து இலட்சம் பேர் வரை தாராளமாக கலந்து கொள்ளலாம். மேடை மட்டும் 70 அடி நீளம், 56 அடி அகலத்தில் நிறுவப்படுகிறதாம். இளைஞர் அணியினரின் அணி வகுப்பு 4 கி. மீட்டர் தொலைவிற்கு இருக்கும். நானும், பொதுச் செயலாளரும், கழகத்தின் மூத்த முன்னோடிகளும் அணிவகுப்பினை ஓரிடத்தில் அமர்ந்தவாறு பார்க்கவுள்ளோம். கழகத்தின் இளைஞர் அணியைச் சேர்ந்தவர்களுக்கும், குறிப்பாக இளையவர்களுக்கும் மாநாட்டில் பேசுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். பேச்சாளர்களின் பெயர்களும், பேசுவதற்கான தலைப்பும் இளைஞர் அணியின் செயலாளரால் இரண்டொரு நாட்களில் வெளியிடப்படும். மாநாட்டில் அதிகம் பேர் பேசிட விரும்புவார்கள் என்பதால், பேச்சாளர்கள் தங்களது பேச்சினை குறள் போல அமைத்துக் கொண்டு, குறுந்தொகையென

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

'திராவிட மாடல்' ஆட்சியின்

# வெற்றி மகுடத்தில் மேலும் ஓர் வைரம்!

## 'மக்களுடன் முதல்வர்' திட்டம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, டிச. 16-**

**'மக்களுடன் முதல்வர் திட்டம்' திராவிட மாடல் ஆட்சியின் வெற்றி மகுடத்தில் மேலும் ஓர் வைரம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பெருமிதத்துடன் பதிவிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பதிவு வருமாறு:–

உங்களில் ஒருவனான என்னை, உங்களுக்கான ஒருவனாக உருவாக்கி முதலமைச்சர் பொறுப்பை ஏற்க வைத்தீர்கள்.

நமக்கு வாக்களிக்காத மாற்றுச் சிந்தனை கொண்டோரும் 'தி.மு.க.வுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே!' என்று எண்ணும் வகையிலான மக்கள் நலன் பேணும் ஆட்சியைக் கட்டமைத்து வருகிறோம்.

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
- விடியல் பயணம்
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்



- புதுமைப்பெண் திட்டம்
- இல்லம் தேடிக் கல்வி
- இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48
- நான் முதல்வன்

– போன்ற நமது 'திராவிட மாடல்' அரசின் திட்டங்கள் அனைத்தும் உங்களை வந்து சேர்வதை உறுதிசெய்திட 'கள ஆய்வில் முதலமைச்சர்' என உங்கள் மாவட்டங்களுக்கு வந்தேன்.

இதனை இன்னும் செம்மைப்படுத்திட வேண்டுமல்லவா!

உங்களின் தேவைகளும் அரசின் சேவைகளும் ஒரு குடையின்கீழ் சந்தித்து விரைவில் தீர்வுகள் கிடைத்தால் அது திராவிட மாடலின் வெற்றி மகுடத்தில் மேலும் ஒரு வைரம் என மின்னிடுமே!

அப்படியான திட்டமாக உருப்பெறுகிறது மக்களுடன்முதல்வர் திட்டம்!

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க (நாளை மறுதினம்) திங்களன்று கோவைக்கு வருகிறேன்...

அமைச்சர் பெருமக்கள், மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு இந்தத் திட்டத்தின் பயன் மக்களைச் சென்றடைய உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 3 ஊர்திகள், 7 அதி உயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள், 20 வாட்டர் பவுசர் வாகனங்கள், 25 புதிய நீர்தாங்கி வண்டிகள், மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 ஜீப்கள், பேரிடர் நேரங்களில் ஆட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிச் செல்லும் 2 ஊர்திகள் ஆகியவற்றை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இணை இயக்குநர் திருமதி என்.ப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ. 6000 நிவாரணம்: 2வது நாளாக டோக்கன் விநியோகம்!

*சென்னை, டிச. 16-*

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழ்நாடு அரசு அறிவித்த 6 ஆயிரம் ரூபாய் நிவாரணம் பெறுவதற்காக 2வது நாளாக டோக்கன் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் 6 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். புயல் நிவாரணம் நியாய விலை கடைகள் மூலம் ரொக்கமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. நிவாரணம் பெறுவதற்கான டோக்கன் விநியோகம் நேற்று தொடங்கியது. நியாய விலைக் கடைகள் மூலம் மக்களுக்கு டோக்கன் வழங்கப்படுகிறது. இந்நிலையில், இன்று 2வது நாளாக டோக்கன் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு இடங்களில் நியாய விலைக்கடை ஊழியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் வீடு வீடாக சென்று டோக்கன் விநியோகம் செய்து வருகின்றனர்.

வருகிற ஞாயிற்றுக்கிழமை முதல் 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகை ரொக்கமாக வழங்கப்பட உள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 16-12-2023

# நாடாளுமன்றம் எதற்கு?

நாட்டைப் பற்றிப் பேசுவதற்குத்தான் ‘அனுமதிக்க மாட்டேன்’ என்கிறார்கள் என்றால், நாடாளுமன்றத்தைப் பற்றிப் பேசுவதற்கே நாடாளுமன்றத்தில் அனுமதி இல்லை. பின்னர், நாடாளுமன்றம் எதற்கு? மியூசியமா அது?

**“நாடாளுமன்றத்தில் நேற்று வீசப்பட்டது விஷ வாயுவாக இருந்திருக்குமானால் பலரும் கொல்லப்பட்டிருப்பார்கள்” என்று காங்கிரசு உறுப்பினர் அதிரஞ்சன் சவுத்திரி சொல்லி இருக்கிறார். இப்படி நடந்திருந்தால் என்ன ஆகி இருக்கும்?**

கடந்த 13 ஆம் தேதியன்று நாடாளுமன்றத்துக்குள் வந்து புகைக் குண்டு வீசி இருக்கிறார்கள் இருவர். மற்ற இரண்டு பேர் நாடாளுமன்றத்துக்கு வெளியில் வீசி இருக்கிறார்கள். இப்படி வீசியவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் ஓடிப் போய் பிடித்தார்களே தவிர பாதுகாவலர்கள் அல்ல. **‘இது ஆபத்தான குண்டு அல்ல’ என்று விளக்கம் கொடுக்கிறார் சபாநாயகர் ஓம் பிர்லா. இதுதான் இந்திய நாட்டின் நாடாளுமன்றத்துக்கு உள்ள பாதுகாப்பு ஆகும்.**

நாடாளுமன்றக் கட்டடத்தையே பாதுகாக்கத் தவறியவர்கள், இந்திய நாட்டை எப்படிப் பாதுகாப்பார்கள் என்ற கேள்வியால் பிரதமரும் உள்துறை அமைச்சரும் பா.ஜ.க. தலைமையும் தலை கவிழ்ந்து கிடக்கிறார்கள். இந்தச் சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்தில், எதுவுமே நடக்காதது மாதிரி நாடாளுமன்றத்தை நடத்திக் கொண்டும் இருந்தார்கள்.

மறுநாள் 14ஆம் தேதியாவது நாடாளுமன்றத்தில் உரிய விளக்கம் தரப்பட்டதா என்றால் அதுவும் இல்லை. ‘கடப்பாறையை விழுங்கிவிட்டு கசாயம் குடித்தால் போதும்’ என்பதைப் போல உட்கார்ந்து கொண்டது ஒன்றிய அரசு.

நாட்டின் நாடாளுமன்றத்தில் புகைக் குண்டு வீசப்பட்டது குறித்து நாடாளுமன்றம் விசாரிக்க வேண்டாமா? இது தொடர்பாக உறுப்பினர்கள் கேள்வி கேட்க வேண்டாமா? நேரடியாகப் பார்த்த உறுப்பினர்கள் அதனைச் சுட்டிக் காட்ட வேண்டாமா? இது தொடர்பான விசாரணைகளை உள்துறை அமைச்சர் விளக்க வேண்டாமா? - இவை எதுவுமே நடக்கவில்லை.

தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனைவரும், ‘நாடாளுமன்றத்துக்குள் நடந்த புகைக்குண்டு வீச்சு சம்பந்தமாக விவாதம் நடத்த வேண்டும். இறுதியாக உள்துறை அமைச்சர் அமித்ஷா பதில் சொல்ல வேண்டும்’ என்று கோரிக்கை முழக்கம் எழுப்பினார்கள். 2 பேர் நோட்டீஸ் கொடுத்தால் கூட விவாதம் நடத்துவார்கள். ஆனால் 28 பேர் நோட்டீஸ் கொடுத்தும் விவாதிக்கவில்லை.

“உரிய விசாரணை நடத்தி வருவதால் விவாதம் தேவை இல்லை” என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி சொன்னார். என்ன விசாரணை நடைபெறுகிறது என்பதையாவது நாடாளுமன்றத்துக்குச் சொல்ல வேண்டாமா? “பிரதமர், உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் பதிலளிக்கும் வரை பிரச்சினை எழுப்புவோம்” என்று எதிர்க்கட்சிகள் சொன்னார்கள். அதில் உறுதியாக இருந்தார்கள். பிரதமரும், உள்துறை அமைச்சரும் அவைக்கே வரவில்லை.

நாடாளுமன்றத்துக்குள் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரிக்கை முழக்கமிட்ட உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்தார் சபாநாயகர். தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி, சேலம் பார்த்திபன், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களான ஜோதிமணி, மாணிக்கம் தாகூர், பிரதாபன், ஹபி ஈடன், ரம்யா ஹரிதாஸ், டீன் குரியகோஸ், வி.கே.ஸ்ரீகண்டன், பென்னி பெஹனான், முகமது ஜாவேத் ஆகியோரும், மார்க்சிஸ்ட் உறுப்பினர்களான நடராஜன், சு.வெங்கடேசன் ஆகியோரும், இந்தியக் கம்யூனிஸ்ட் உறுப்பினரான சுப்பராயனும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்கள். மொத்தம் 13 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்கள்.

இதில் தி.மு.க. உறுப்பினரான சேலம் பார்த்திபன், அன்றைய தினம் அவைக்கு வரவில்லை. அவரையும் சஸ்பெண்ட் செய்துவிட்டார்கள். ‘அவைக்கே வராதவர் எப்படி முழக்கம் எழுப்பி இருக்க முடியும்?’ என்று தி.மு.க. எம்.பி.க்கள் கேட்டதும், பார்த்திபன் மீதான நடவடிக்கை திரும்பப் பெறப்பட்டது. ‘அடையாளம் காண்பதில் ஏற்பட்ட தவறு’ என்று விளக்கம் அளித்தார் அமைச்சர் பிரகலாத் ஜோஷி. இவர்களுக்கு உறுப்பினர்களையும் அடையாளம் தெரியவில்லை, குண்டு போடுபவர்களையும் அடையாளம் தெரியவில்லை.

**புகைக் குண்டு வீசியவர்களுக்கு அனுமதி பாஸ் கொடுத்தவர் பா.ஜ.க. எம்.பி. அவர் சபைக்குள் இருக்கிறார். அவர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால் அது பற்றி கேள்வி எழுப்பிய உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்கள். “குற்றவாளிகளுக்கு பாஸ் வழங்கிய எம்.பி. மீது கைது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு வலியுறுத்தினார். அதற்கு எந்தப் பதிலும் இல்லை.**

“மஹூவா மொய்த்ரா பிரச்சினையை விட, தீவிரவாதிகளுக்கு பா.ஜ.க. எம்.பி., பிரதாப் சிம்பா, பாஸ் வழங்கப் பரிந்துரைத்தது கடுமையான விதி மீறல். தேசப் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது” என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தர்கள். பாஸ் வழங்கியது குறித்து பா.ஜ.க. எம்.பி. இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

நாடாளுமன்றப் பாதுகாப்பில் மிகப்பெரிய குளறுபடி உள்ளது. நாடாளுமன்றப் பாதுகாப்புப் பிரிவு இணை இயக்குனர் பதவி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக காலியாக இருக்கிறது. பாதுகாப்புப் பணியில் 301 காவலர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 176 பேர் மட்டுமே பணியில் இருப்பதும் தெரிய வந்துள்ளது. நாடாளுமன்ற புதிய கட்டிடத்தின் பாதுகாப்புக்காக புதிய நியமனங்கள் நடத்தவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. பாதுகாப்பு அதிகாரிகள் 7 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வளவுதான்.

நாடாளுமன்றத்தில் புகைக்குண்டு போட்ட மனோரஞ்சன் என்பவர், ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரின் போதும் பார்வையாளர் பாஸ் பெற்று நாடாளுமன்றம் வந்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது. உள்ளே புகுந்தவர்கள் இரண்டு பேர் மட்டுமல்ல, வெளியே இவர்களது ஆட்கள் அதிகம் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதைப் பற்றி எல்லாம் ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டாமா? இதைக் கேள்வி கேட்பது தவறா?

**அதானியைப் பற்றிப் பேசினால் டிஸ்மிஸ், நாடாளுமன்ற அச்சுறுத்தல் பற்றிப் பேசினால் சஸ்பெண்ட் - இவைதான் பா.ஜ.க.வின் ஜனநாயகப் பாதையாக இருக்கிறது.**

## சென்னை - கொல்லம் இடையே சிறப்பு ரயில்கள்!

### தெற்கு ரயில்வே அறிவிப்பு!

சென்னை, டிச. 16 –

சபரிமலை சீசனையொட்டி, சென்னை – கொல்லம் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். இன்று பிற்பகல் தாம்பரத்தில் இருந்து சிறப்பு ரயில் புறப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சபரிமலை ஐயப்ப கோவில் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜைகளுக்காக கடந்த மாதம் 17ந் தேதி நடை திறக்கப்பட்டது. சபரிமலையில் கடந்த ஆண்டுகளை விட வரலாறு காணாத பெரும் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது. பொதுவாக சபரிமலை ஐயப்பன் கோவிலில் சராசரியாக 65,000 பக்தர்கள் ஐயப்பனை தரிசனம் செய்வர். ஆனால் நடப்பாண்டில் சராசரியாக 80,000 முதல் 90,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்கின்றனர். இதனால் தரிசன நேரமும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், பல்வேறு முக்கிய நகரங்களில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன. அந்த வகையில், தாம்பரம் – கொல்லம் இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பணியாளர்களின் ஒருநாள் சம்பளத் தொகையான ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன், வேளாண்மை – உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கீதாலட்சுமி ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக, தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானக் கழக பயிற்சி நிலையத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 50 தொழிலாளர்களுக்கு இலவச திறன் பயிற்சியும், 50 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சியையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் பொன். குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். செங்கல்பட்டு மாவட்டம், தையூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.63.30 கோடி மதிப்பில்

# தீயணைப்பு - மீட்புப் பணிக்கான ஊர்திகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச. 16-**

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான ஊர்திகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் மதிப்பிலான வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 3 ஊர்திகள், 7 அதிஉயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள், 20 வாட்டர் பவுசர் வாகனங்கள், 25 புதிய நீர்தாங்கி வண்டிகள், மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 ஜீப்கள், பேரிடர் நேரங்களில் ஆட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிச் செல்லும் 2 ஊர்திகள் ஆகியவற்றை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, “காக்கும் பணி எங்கள் பணி” என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் துறையாகும். பேரழிவை ஏற்படுத்தும் தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும், மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட அரசு பல்வேறு நவீன கருவிகள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில், பலமாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துகளை சமாளிக்க 54 மீட்டர் உயரம் வரை வான்நோக்கி உயரும் ஏணி கொண்ட 3 ஊர்திகள், மலைப்பாங்கான இடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களை கையாள்வதற்கு நான்கு சக்கர இயக்கம் கொண்ட 7 அதிஉயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள், தீ விபத்திடங்களில் ஏற்படும் தண்ணீர் தேவையினை உடனடியாக சமாளிக்க 12 ஆயிரம் லிட்டர் கொள்ளவு கொண்ட 20 வாட்டர் பவுசர் வாகனங்கள், பழுதடைந்த நீர்தாங்கி வண்டிகளுக்கு மாற்றாக 25 புதிய நீர்தாங்கி வண்டிகள், மாவட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 ஜீப்கள், பேரிடர் நேரங்களில் ஆட்கள் மற்றும் உபகரணங்களை ஏற்றிச் செல்லும் 2 ஊர்திகள் ஆகியவை 63.30 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பயன்பாட்டிற்காக 63.30 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள ஊர்திகளை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ப. அமுதா, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இணை இயக்குநர் திருமதி என். ப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 100 பயனாளிகளுக்கு – தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்

# பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் - ரூ.1.32 கோடி கடனுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச.16 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 7 பயனாளிகளுக்கு ரூ.21.40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை கடனுதவியாக வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக் கூறுள்ள சிறு தொழில்கள், வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிறுவனம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாகச் செயல்பட்டு வருகிறது. இக்கழகமானது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கூட்டுறவு நகர வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

2023-24 ஆம் நிதியாண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக, 7 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் கடனுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும், மீதமுள்ள 93 பயனாளிகளுக்கு இன்றையதினமே சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் அன்னை தெரசா வளாக கூட்டரங்கில் நடைபெறும் விழாவில், அமைச்சர் பெருமக்களால் கடனுதவிக்கான காசோலைகள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம், பயனாளிகள் வளையல் வியாபாரம், பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, பட்டு நெசவு, தையல் தொழில், அழகு நிலையம், பலசரக்கு கடை, உணவகம், துணிக்கடை, தேங்காய் மற்றும் காய்கறி வியாபாரம் போன்ற தொழில்களை மேற்கொள்ள கடனுதவி வழங்கப்படுகிறது.

இக்கழகத்தின் மூலம் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக அதிகபட்சமாக நபர் ஒருவருக்கு ரூ.15 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் கா.காஜா முகைதீன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் அணில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா. சம்பத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘திராவிட மாடல்’ ஆட்சியின் மற்றுமொரு மைல் கல்லாக

# “மக்களுடன் முதல்வர்” எனும் புதிய திட்டம்!

## கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் டிச. 18 அன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 16 -

**தமிழ்நாட்டில் அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திட வழிவகுக்கும் “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டம் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18-12-2023 அன்று கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்படுகிறது.**

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த சமூக நீதிப் பாதையில், ஏழையெளிய, நடுத்தர மக்கள், விவசாயிகள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில், பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தீட்டி, இந்தியத் துணைக் கண்டமே போற்றும் வகையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் கிடைத்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

**100 நாட்களில் தீர்வு: வரலாற்றுச் சாதனை!**

அந்தவகையில், தாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமது தேர்தல் பரப்புரையின் போது பெறப்பட்ட மனுக்களின் மீது தீர்வு காண, “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்ற துறையை உருவாக்கி, அனைத்து மனுக்களுக்கும் 100 நாட்களில் தீர்வு கண்டு வரலாறு சாதனை படைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக, பொதுமக்களின் கோரிக்கைகளைத் திறம்பட கையாண்டு, அவற்றை நிறைவேற்றிட ஏதுவாக, “முதல்வரின் முகவரித் துறை” என்ற தனித்துறையை உருவாக்க ஆணையிட்டார்கள். இதன்மூலம் கடந்த இரண்டரை ஆண்டுகளில் சுமார் 49 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றிற்கு உரிய முறையில் தீர்வு காணப்பட்டு வருகிறது.

அதோடு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேரடியாக மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற முன்னெடுப்பின் கீழ், மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, கள ஆய்வுகள் மேற்கொண்டு, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பொது மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த முன்னெடுப்பின் நீட்சியாக, அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைப்படுத்தி, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18-12-2023 அன்று கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

**அனைத்துத் துறைகள் சார்பில் சிறப்பு முகாம்கள்!**

“மக்களுடன் முதல்வர்” என்ற



இத்திட்டத்தில், பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டு கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் போன்ற அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெறுவதற்கு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புற, மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- **முதற்கட்டமாக வரும் 18-12-2023 ஆம் தேதி முதல் 06-01-2024 வரை அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகரப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளிலும் 1745 முகாம்கள் நடத்தப்படும். இந்த முகாம்கள் புயலால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்கள் நீங்கலாக, ஏனைய மாவட்டங்களில் நடத்தப்படும்.**
- **சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முடிவுற்றவுடன், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து 31-1-2024 வரை “மக்களுடன் முதல்வர்” திட்டத்திற் கான சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.**
- **முதற்கட்டமாக, நகர்ப்புறங்களில் நடத்தப்படும் முகாம்கள் முடிவுற்ற பின்னர், அடுத்த கட்டமாக, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்த ஆவன செய்யப்படும்.**

**30 தினங்களுக்குள் மனுக்கள் பரிசீலனை!**

- **இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.**
- **முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூரில் இத்திட்டத்தினை துவக்கி வைக்கும் அதே நேரத்தில், அமைச்சர் பெருமக்கள் அவர்களுடைய மாவட்டங்களிலும், பொறுப்பு அமைச்சர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களிலும் இம்முகாம்களை தொடங்கி வைக்கவுள்ளனர். இம்முகாம்களில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர்.**

பொதுமக்கள் இம்முகாம்களை நல்ல முறையில் பயன்படுத்தி உரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள தெரிவித்தும், துறை அலுவலர்கள் கோரிக்கைகளை அக்கறையோடு பரிசீலித்து அவர்களுக்கு சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய உதவிகளை எவ்வித தாமதமும் இன்றி, விரைவாகவும் எளிதாகவும் உரிய முறையில் தீர்வு காண முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## புயல் பாதிப்பு:

# மக்களை சிறந்த முறையில் பாதுகாத்த தமிழ்நாடு அரசு!

## ஆய்வு மேற்கொண்ட ஒன்றியக் குழுவின் தலைவர் குணால் சத்யாத்ரி பாராட்டு!

சென்னை, டிச. 16 -

தமிழ்நாடு அரசு “மிக்ஜாம்” புயலால் ஏற்பட்ட பெருமழையினை எதிர்கொண்டு, மேற்கொண்ட நிவாரணப் பணிகள் அனைத்தும் மிகுந்த பாராட்டுக்குரியவை என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றியக் குழுவின் தலைவர் குணால் சத்யாத்ரி அவர்கள் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

மிக்ஜாம் புயல் ஏற்படுத்திய பெருமழையால் பாதிக்கப்பட்ட சென்னை உட்பட 4 மாவட்டங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம். ஆய்வுப் பணிகள் மேற்கொண்டதில் எங்களுக்கு மனநிறைவு ஏற்பட்டுள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம் புயல் எச்சரிக்கையை முன்கூட்டியே வெளியிட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு தகுந்த அறிவியல்பூர்வமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, செம்பரம்பாக்கம் ஏரியை முன்கூட்டியே திறந்துவிட்டதனால் பெருமளவிலான வெள்ளச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற புயல் 50 அல்லது 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை வீசக்கூடியது. தற்போது வீசிய புயல் சென்னைக்கு அருகே கடலோரத்தில் நிலையாக நின்று பெருமழையைத் தந்து, தமிழ்நாட்டின் கடற்கரையையொட்டி



நகர்ந்து ஆந்திரா மாநிலத்திற்குச் சென்றுவிட்டது. பெருமழை காரணமாக தாழ்வான பகுதிகளில் தேங்கிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று, அவர்களை பாதுகாத்து, உயிரிழப்புகள் அதிகம் ஏற்படாமல் மாநில அரசு தடுத்துள்ளது. தேசிய பேரிடர் மீட்புக் குழு, மாநில பேரிடர் மீட்புக் குழு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் விரைவாகச் செயல்பட்டு நிவாரணப் பணிகளை சிறப்பாக மேற்கொண்டுள்ளனர். பெருமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குமிடம், உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கி சிறந்த முறையில் அரசு பாதுகாத்துள்ளது.

தமிழ்நாடு அரசு எங்களுக்கு வெள்ளச் சேதம் குறித்த விவரங்களை அளித்துள்ளது. எங்கள் குழுவும் பல்வேறு இடங்களை பார்வையிட்டு, உண்மை நிலவரங்களை ஆய்வு செய்து விவரங்களைத் திரட்டியுள்ளது. அவற்றின் அடிப்படையில் குழு தயாரிக்கும் ஆய்வு அறிக்கை ஒன்றிய அரசுக்கும், ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கும் அளித்து நிவாரண உதவிகள் விரைவில் கிடைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

இவ்வாறு ஒன்றியக் குழுவின் தலைவர் குணால் சத்யாத்ரி தெரிவித்தார்.

## கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட 15 எம்.பி.க்களின் இடைநீக்கம் கண்டனத்திற்குரியது!

# நாடாளுமன்ற ஜனநாயகத்தை மலினப்படுத்துவதாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச.16 -

மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட 15 எம்.பி.க்களின் இடைநீக்கம் மக்களாட்சிக்கு எதிரானது; நாடாளுமன்ற ஜனநாயகத்தை மலினப்படுத்துவதாகும் என்றும், பா.ஜ.க.வின் சகிப்புத் தன்மையற்ற போக்கு கண்டனத்துக்குரியது என்றும் குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்திருப்பதை கண்டித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**தி.மு.க. மக்களவை உறுப்பினர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட 15 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்திருப்பது மக்களாட்சிக்கு எதிரானதும், நாடாளுமன்ற ஜனநாயகத்தை மலினப்படுத்துவதும் ஆகும்.**

**பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசின் இந்த சகிப்புத்தன்மையற்ற போக்கு கண்டனத்துக்குரியது.**

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துரிமையை நசுக்குவதுதான் நாடாளுமன்றத்தின் புதிய நடைமுறையாகி வருகிறதா? மக்களாட்சியின் உயரிய கோயிலாகிய நாடாளுமன்ற அவையில் ஏற்பட்ட மிகப் பெரும் பாதுகாப்பு மீறல் குறித்துக் கேள்வி கேட்பதற்காக மக்கள் பிரதிநிதிகள் தண்டிக்கப்படுவது ஏன்?**

**15 நாடாளுமன்ற உறுப்பினர்களின் இடைநீக்கத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்று கோருகிறோம். நாடாளுமன்றம் என்பது விவாதத்துக்கான களமாக இருக்க வேண்டுமே ஒழிய, எதிர்க்கட்சிகளின் குரலை அடக்குவதற்காக இருப்பது அறவே கூடாது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



சேலத்தில் டிசம்பர் 24-ல் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டிற்கான நிதியாக நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக ரூபாய் 12 லட்சத்தை, கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் தலைமையில், மாவட்ட அமைப்பாளர் பாலாஜி, துணை அமைப்பாளர்கள் சுந்தர், நவலடிராஜா, கதிரவன், மல்லை ஜெகதீஷ், முரளி, கார்த்திக் ஆகியோர் வழங்கினர்.

# மாநாட்டில் அணிவிக்கும் மணிமுத்து மாலை!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

குறைந்த நேரத்தில் நிறைவாக பேசத்தக்க வகையில் முன்கூட்டியே தயாரித்துக் கொண்டு பேசுவார்கள்.

அணிவகுப்பிலே வரும்போது, தாங்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை விளக்கிடும் வகையில் மாவட்ட சார்பில் முன் பகுதியில் வருவோர் எந்த மாவட்டம் என்ற பதாகையினை ஏந்தி வருவார்கள். ஒவ்வொரு மாவட்டத்தின் சார்பிலும் பத்தாயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர், இருபதாயிரம் பேர் பங்கேற்கவுள்ளனர் என்றெல்லாம் அன்றாடம் ஏடுகளில் வரும் செய்திகள், வெறும் செய்திகளாக மட்டுமல்லாமல், உண்மையில் அத்தனை பேர் பங்கேற்கும் வகையில் இப்போதிருந்தே பணியாற்றுகின்றனர்.

நெல்லை மாவட்டக் கழகச் சார்பிலும், இளைஞர் அணியின் சார்பிலும், மாநாடு பற்றிய விவரங்களையெல்லாம் செய்தியாளர்களுக்கு ஏற்கனவே தெரிவித்து அவை ஏடுகளில் வந்துள்ளன.

தமிழகத்தின் தென்கோடியில் நடைபெறும் மாநாட்டிற்கு நீண்ட தூரத்திலிருந்து பயணம் செய்து வருவோர் பாதுகாப்பாக வந்திட வேண்டும். வாகனங்களில் வருவோர் மிகுந்த எச்சரிக்கையாக இருந்திட வேண்டும். இரவுப் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது.

இதற்காகவே எழுதியது போல ஒரு கட்டுரை - நமது தமிழர் தலைவரும் நெல்லை இளைஞர் அணி மாநாட்டில் முதல் நாள் மாலை நிகழ்ச்சிக்கு தலைமையேற்க இருப்பவருமான வீரமணி அவர்களின் “வாழ்வியல் சிந்தனைகள்” பற்றிய கருத்துப் புதையலை நினைவூட்ட விரும்புகிறேன். வாழ்வியலுக்கு வகையான - தேவையான - பல கருத்துக்களை - அறிவுரைகளை உள்ளடக்கிய கட்டுரைகளின் தொகுப்பு அது.

அதில் இந்தக் கட்டுரை வருமாறு :

★ “நாளும் வானொலி, தொலைக்காட்சி, ஏடுகளில் செய்திகளில் தவறாது இடம் பெறுவது சாலை விபத்துக்கள். பல உயிர்கள் அன்றாடம் பலியாவது ஏதோ வானிலை, மார்க்கெட் நிலவரம் என்பன போன்று அன்றாட அவலச் செய்தியாகி வருவதும் மனித நேயம் படைத்தவர்களின் உள்ளத்தைப் பிழிந்தெடுக்கிறது!

மறைந்த ராம்நாத் கோயங்கா (தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனர்) அவர்களின் முக்கிய அறிவிப்பு ஒன்றை நான் அடிக்கடி நினைவு கூர்ந்து, மேற்கோளாகச் சொல்வதுண்டு.

“நான் எந்தச் சட்டங்களையும் மீறுவதற்குத் தயாராக இருப்பேன். ஆனால், ஒரே ஒரு சட்டத்தை மட்டும் மீறத் தயாராக இல்லை; அதுதான் போக்குவரத்து விதி பற்றிய சட்டம். காரணம், அது எனது உயிரைப் பாதுகாக்கவே ஏற்பட்டது என்ற நினைப்பு எனக்கு எப்போதும் உண்டு” என்பதே - அவரது அந்த அறிவுரை!

இது மிக வரவேற்கத்தக்க அறிவிப்பு அல்லவா? ஆனால், நம்மில் பலர் போக்குவரத்து விதிகளுக்கு கீழ்ப்படிவது என்பதை ஏதோ போலீஸ்காரருக்கு உதவுவது போல ஒரு தவறான சிந்தனையுடன் அல்லவா கீழ்ப்படிகிறோம்? இதைவிட வெட்கக்கேடு வேறு உண்டா?

மனித உயிர்களைப் பலி கொள்ளும் விபத்துக்கள் (Accident) என்பவை இமை மூடித் திறப்பதற்குள் எதிர்பாராது ஏற்படும் அதிர்ச்சிச் சம்பவம் ஆகும்!

வாகனங்களை ஓட்டிச் செல்லும்போது, நாம் கவனத்துடன் ஓட்டிச் சென்றால் மாத்திரம் போதாது; எதிர் வரும் வண்டி ஓட்டுநரின் கவனக் குறைவையும் எதிர்கொண்டு சமாளித்து ஓட்ட வேண்டிய இரட்டைப் பொறுப்பு உண்டு.

அதிவேகம் என்பது ஒரு ஓட்டுநருக்குப் பெருமை அல்ல; அதிக காலம் இவர் எந்தவிதத் தவறும் செய்யாத ஓட்டுநர் என்பதே நிரந்தரப் பெருமைக்குரியதாகும் என்பதை ஓட்டுநர் நண்பர்கள் மறக்கக் கூடாது!

சிலர் இரவு பத்து மணிக்கு மேல் போக்கு வரத்து விதி செயல்முறை கிடையாது என்று அறியாமையால் உளறுவதுண்டு; சட்டத்தின் முன் இரவென்ன? பகலென்ன? எல்லாம் அதற்கு ஒன்றுதானே! நினைவிற்கொள்வோமாக!

இரு சக்கர வாகனங்கள் வைத்து ஓட்டும் நடுத்தர வயதுள்ள மக்கள் -இளைஞர்கள் - மாணவ - மாணவிகள் எண்ணிக்கை, மக்கள் தொகைப் பெருக்கம் போல நாள்தோறும் பெருகிக் கொண்டே போகிறது. “கண் மண் தெரியாத” - இளங்கன்றுகளுக்குப் பயம் தெரியாது என்ற பழமொழிக்கொப்ப - விமான வேகத்தில் அதிக ஓசையைக் கிளப்பி ஓட்டுவதில் தனி உற்சாகம் கொள்வது அவர்களுக்கே பற்பல நேரங்களில் உயிர்க்கொல்லி ஆகிவிடுகிறது.

இதில் “செல்” போனில் பேசிக் கொண்டே ஓட்டுவது, எரிதழலில் நெய்யூற்றலாகி விடுகிறது! எதிரில் வாகனம் வருவதை திடீர் எனக் கண்டு திருப்பவோ, “பிரேக்” போடவோ முயன்று, தூக்கி எறியப்பட்டோ அல்லது எதிர் வாகனங்களில் சிக்கியோ மாளும் மாந்தர்கள்தான் எத்தனை பேர்?

என்னே கொடுமை?

தலைக் கவசம் (ஹெல்மெட்) போடுவது மிக மிக அவசியம். மூளைப் பகுதியில் பின் தலைப் பகுதியில் அடிபட்டு, பிழைத்தால்கூட பல உறுப்புக்கள் செயலிழக்கும் பேரபாயம் உண்டே! அதை அணிவதை ஏன் தவிர்க்க வேண்டும்? நமது பாதுகாப்புக்குத் தானே அது?

அதைவிடக் கொடுமை, இரு சக்கர வாகன ஓட்டிகள், வரிசையாக வாகனங்கள் செல்லும்போது “இண்டு இடுக்கு” சந்து தெரிந்தால்கூட உடனே நுழைந்து பறக்கத் தொடங்கி, ஒரே அடியாய் பறந்தே விடுகின்றனரே!

இதில் இன்னொரு கொடுமை - அந்த வாகனம் இன்னொருவரிடமிருந்து இரவல் வாங்கிய வாகனம். அதனால் ஏற்படும் நட்டம் உயிர்ச் சேதம், மற்றவருக்கு பொருள் இழப்பு, வழக்கில் சிக்குபவர் வாகன உரிமையாளரே! அதைவிட மேலும் ஒரு “போனஸ் கொடுமை” அந்த வண்டியில் எரிசக்தி நிரப்பித் தராமல், காலி செய்து விட்டு அவரிடம் திருப்பித் தரும் அநாகரிகச் செயல்.

இப்படியா வாழ்க்கையை ஓட்ட வேண்டும்? எண்ணுக! உயிர்க் கொல்லிகளுக்கு அழைப்பு விடுத்து, ஆயுளை முடித்துக் கொள்ளாதீர்கள் நண்பர்களே!

மனித உயிர் விலை மதிப்பற்றது! நல்லவர்களை இழந்து கண்ணீர்க் கடலில் தத்தளிக்கும் பல குடும்பங்கள் - பெற்றோர்கள் சார்பாகவே இந்த வேண்டுகோள்.

போக்குவரத்து விதிகளின்படி பயணம் செய்யப் பழகுவீர்!

அவ்விதிகள் நம் உயிர் காக்கும் தோழன் - துணைவன் என்பதை மறவாதீர்!”

★★

உடன்பிறப்பே, பேராயர் வின்சென்ட் சின்னதுரை சிறப்புடன் ஏற்பாடு செய்துள்ள சீர்மிகு நிகழ்ச்சி - கலைஞர் காவியம் 84 - தமிழர் தலைவர் வீரமணியார் தலைமை ஏற்கும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு வாழ்த்துரை வழங்க - கவிப்பேரரசு தம்பி வைரமுத்து வருகிறார். அவர் எழுதிக் குவித்துள்ள கவிதைக் கருவூலத்தில் என் கண்ணில் பட்ட கருத்துக் கவிதையொன்றை இதோ; உன் போன்றோர் கருதிட தருகிறேன்.

“தெற்கே தெற்கே ஜாதிகள் மூட்டும்
தீயே பற்றாதே! - பழங்
கற்காலத்துப் பாம்பே! எங்கள்
காலைச் சுற்றாதே!

மண்பானைகளும் மண்பானைகளும்
மல்லுக்கு நிற்பதுவோ - இங்கே
கண்ணீர்த்துளிகளும் கண்ணீர்த்துளிகளும்
கைகள் கலப்பதுவோ?

தாழ்த்தப்பட்டவர் ஒடுக்கப்பட்டவர்
சண்டை பிடிக்கையிலே - அங்கே
வீழ்த்தப்படுவதும் வெல்லப்படுவதும்
வேறோர் இனம(ல்)லவே!

முந்நூற்றாண்டை முன்னுக் கிழுக்குது
முரட்டு விஞ்ஞானம் - நாமோ
முந்நூறாண்டு பின்னே செல்வது
முழுக்க அஞ்ஞானம்

அந்நிய ரோடு சண்டை செய்தது
ஆறோ ஏழோதான் - சொந்த
மண்ணவரோடு சண்டை கொண்டது
மணலினும் அதிகம்தான்

செயற்கை மனிதன் செவ்வாய்த் தரையில்
சிற்றில் ஆடுகையில் - இங்கே
இயற்கை மனிதர் ஜாதிச் சண்டையில்
இடுப்பு முறிவதுவோ?

நீண்ட நாள்முதல் யாரோ விதைத்த
நெருப்பின் மிச்சத்தில் - மண்ணை
ஆண்ட பரம்பரை இன்று வரைக்கும்
அழிந்து கருகுவதோ?

புதைந்த தமிழின் சங்கம் மூன்றைப்
புதுக்க எண்ணாமல் - நம்மைப்
புதைக்கும் ஜாதிச் சங்கத்துக்குள்
புதைந்து போவீரோ?

வறுமை ஏழ்மை பேதைமைக் கெதிராய்
வாளை எடுக்காமல் - நாம்
ஒருவரை ஒருவர் எரித்து மகிழும்
உற்சவம் நடத்துவதோ?

புத்தகம் ஈந்து கல்விச் சாலை
போகும் சிறுவர்களைக் - கையில்
கத்திகள் தந்து ஜாதிக் களத்தில்
கருகச் செய்வீரோ?

மனிதன் என்னும் நிஜத்தை நீங்கள்
மறந்து தொலைத்துவிட்டு - ஜாதிச்
சனியன் என்னும் கற்பனைக்காகச்
சமர்கள் புரிகுவதோ?

ஆயுதங்களைக் கட்டும் கைகாள்
அணைகள் கட்டுங்கள் - அந்த
ஆயுதங்களை உருக்கி உருக்கி
ஆலைகள் எழுப்புங்கள்

சிறைகள் எடுக்கும் செலவில் நீங்கள்
சிறகுகள் வாங்குங்கள் - வீணே
தரையில் சிதறும் ரத்தம் போதும்
தானம் புரியுங்கள்

முன்னே வள்ளுவன் பின்னே பாரதி
முழங்கினர் ஊருக்கு - அட
இன்னும் நீங்கள் திருந்தா விட்டால்
இலக்கியம் ஏதுக்கு?”

★★

உடன்பிறப்பே, எழுதி எழுதிக் குவிக்கிறாயே; நோகாதா உடல்? தாங்குகிறதா வயது? கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு எழுதலாமே! இப்படி என்னைச் சுற்றிக் குரல்கள்!

என் செய்வது? எழுதும் வரையில்தான் வலி தெரிகிறது! எழுதிடப் பேனா எடுத்தவுடன் - உடன்பிறப்பே, என்று எழுதத் தொடங்கியவுடன்; அந்த வலியும் வேதனையும் எங்கே போயிற்றென்றே தெரியவில்லை!

ஆறு பக்கங்கள், ஏழு பக்கங்கள் எழுதும்போது அசதி வந்து எட்டிப் பார்க்கும் - அலுப்பு வந்து ஆட்டம் போடும் -ஆனால் இறுதியாக “உடன்பிறப்பே” என்று எழுதி முடித்தவுடன் அந்தச் சொல்லுக்குத்தான் என்ன சிறப்பு? என்ன ஓர் உணர்ச்சி? என்ன அப்படியொரு மெய்ச் சிலிர்ப்பு?

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்தின் தலைப்பு “மணிமுத்து மாலை” என்பதற்குப் பொருள் புரிகிறதா?

வீரமணியின் கருத்துரையும், வைரமுத்துவின் கவிதை ஆக்கமும் இணைந்தால் - “மணிமுத்து மாலை” ஆகின்றதன்றோ? அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன்!

“மணிமுத்து” என்று! - அது மாலையாகும்போது எத்துணை மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியை மாநில மாநாட்டில் மலரும் இளைஞர் இதயம்; சமூகங்களுக்கிடையே உருவாக்கிட உதவட்டும்.

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 29.11.2007)

### தையூரில் உள்ள - தமிழ்நாடு கட்டுமானக் கழகப் பயிற்சி நிலையத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு

# இலவச திறன் பயிற்சி - உதவித் தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச. 16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக, தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானக் கழக பயிற்சி நிலையத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 50 தொழிலாளர்களுக்கு இலவச திறன் பயிற்சியும், 50 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சியையும் தொடங்கி வைத்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழுக்களின் தலைவராக தொழிலாளர் நலத்துறை அமைச்சரும், துணைத் தலைவராக தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத் தலைவரும், உறுப்பினர் செயலாளராக தொழிலாளர் ஆணையரும் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசுத் தரப்புப் பிரதிநியாக தொழிலாளர் நலத் துறைச் செயலாளரும், நிதித்துறைச் செயலாளரும், பொதுப் பணி துறைச் செயலாளரும், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளரும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் CREDAI, Builders Association of India (BAI), CII, FICCI மற்றும் Construction Industrial Developmental Council (CIDC) பிரதிநிதிகளும் ஆட்சிமன்றக் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கட்டுமானக் கழகம், அரசு மற்றும் தனியார் தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் மூலம் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு கட்டுமானத் தொழில் சார்ந்த நவீனப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கான மாற்றியமைக்கப்பட்ட மாதிரி நலத்திட்டத்தின் (Modified Model Welfare Scheme) அடிப்படையில், கட்டுமானத் தொழிலாளர்களும் அவர்களுடைய வாரிசுதாரர்களும் திறன் மேம்பாடு பெறுவதற்கு ஏதுவாக மாநில அரசின் திறன் மேம்பாட்டுக் கழகம் / ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறை / தேசிய திறன் மேம்பாட்டு கழகம் இவற்றின் மூலமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், உதவித்தொகையும், பயிற்சிக்கான கட்டணமும் வழங்கப்படுகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூன்றாவது ஆட்சி மன்றக் குழுக் கூட்டம் 24.08.2022 அன்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தை மறு சீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டு சென்னை, டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல வாரிய கட்டடத்திலிருந்து, தமிழ்நாடு கட்டுமானக் கழகம் தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்குச் சொந்தமான கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 23 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்கள் 54 வகையான தொழில் இனங்களில் பதிவு செய்துள்ளனர். பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தங்களுடைய தொழிலினை திறம்படச் செய்யவும், புதிதாக தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் திறன் பெற ஏதுவாகவும் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தில் பயிற்சி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

முதற்கட்டமாக தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர் மற்றும் எலக்டீரிசியன் உள்ளிட்ட 5 தொழில் இனங்களில் ஈடுபடும் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு 7 நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், 3 மாதங்கள் திறன் பயிற்சியும் வழங்க முடிவு செய்யப்பட்டது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்!**

தமிழ்நாடு கட்டுமானக் கழகம் இப்பயிற்சி வழங்க ஏதுவாக கட்டுமானத் தொழில் வளர்ச்சிக் குழுமம் (CIDC) மற்றும் L&T கட்டுமான பயிற்சி நிலையம் (Larsen & Toubro Limited L&T Construction) ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஏற்படுத்தப்பட்டது.

7 நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கு (Skill Upgradation Training) வரும் தொழிலாளர்களுக்கு தினசரி ரூ.800/ வேலை திறன் இழப்பீட்டு உதவித்தொகையும், இலவசத் தங்குமிடமும், 3 மாதங்கள் திறன் பயிற்சியில் (Skill Development Training) கலந்து கொள்பவர்களுக்கு உணவு, தங்குமிடமும் இலவசமாக வழங்கப்படும். மேலும் பயிற்சிக் கட்டணம் ஏதும் இல்லை.

2023-2024க்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானிய கோரிக்கையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள், அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை மேம்படுத்தும் பொருட்டு ஆண்டொன்றுக்கு 4000 நபர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் மற்றும் தச்சர், கொத்தனார், கம்பி வளைப்பவர், பிளம்பர் மற்றும் எலக்ட்ரிசியன் ஆகிய கட்டுமானப் பணிகளில் புதிதாக ஈடுபட்டு வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களில் ஆண்டொன்றுக்கு 1000 நபர்களுக்கு திறன் பயிற்சி அளித்தல் ஆகியவை தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**நிதி ஒதுக்கீடு!**

அந்த அறிவிப்பிற்கிணங்க, 4000 தொழிலாளர்களுக்கு ஏழு நாட்கள் திறன் மேம்பாட்டுப் பயிற்சியும், 1000 தொழிலாளர்களுக்கு மூன்று மாதகால திறன் பயிற்சியும் ஆண்டுதோறும் தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மூலம் வழங்கிட 5 கோடியே 86 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் முலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


அதன்படி, முதற்கட்டமாக, கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்த 50 தொழிலாளர்களுக்கு இலவச திறன் பயிற்சியும், 50 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையுடன் கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியையும் தையூரில் உள்ள தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு நிதியாண்டிலும் 5000 கட்டுமான தொழிலாளர்கள் பயிற்சி பெற்று பலன் பெறுவர். இப்பயிற்சியின் வாயிலாக தொழிலாளர்களின் தொழில்திறன் மற்றும் ஆற்றல் மேம்பட்டு, தனியார் நிறுவனங்களில் நல்ல சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்று அவர்களது வாழ்வாதாரம் உயர வழிவகை ஏற்படும்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் பொன். குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், தையூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், தமிழ்நாடு கட்டுமானக் கழக இயக்குநர் டி. தர்மசீலன், திருப்போரூர் ஒன்றிய குழுத் தலைவர் இதயவர்மன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் பால் கொள்முதல் விலையினை உயர்த்தி வழங்கியமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கத்தின் தலைவர் ஆர். ராஜேந்திரன் மற்றும் நிர்வாகிகள் ரத்னகுமார், எம்.ஜி. ராஜேந்திரன், இராமசாமி கவுண்டர், எஸ்.ஏ. ராசு, ஹரிஹரன், கோவிந்தராஜ் பாண்டியன், பழனியப்பன், குண்டு ரெட்டியார், பிரபாகரன், ராஜேந்திரன், உக்கிரபாண்டி ஆகியோர் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, ஆவின் மேலாண்மை இயக்குநர் எஸ். வினித், ஆகியோர் உள்ளனர்.

### வெடிவிபத்தில் உயிரிழந்த - விருதுநகர் மாவட்டம்

# வெம்பக்கோட்டை சண்முகராஜ் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச. 16- விருதுநகர் மாவட்டம், பனையடிபட்டி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களது அறிக்கை வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், பனையடிபட்டி கிராமத்தில் இயங்கிவந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று (15.12.2023) காலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம்,

பனையடிப்பட்டி கிராமம், கண்டியாபுரத்தைச் சேர்ந்த சண்முகராஜ் (வயது 36) த/பெ. பொம்மு ரெட்டியார் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### நாடாளுமன்ற பாதுகாப்புக் குறைபாடு:

# ஒன்றிய அரசு அறிக்கை அளிக்கும் வரை போராட்டம் தொடரும்!

## எதிர்க்கட்சியினர் முழக்கம் - இரு அவைகளும் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, டிச. 16 - நாடாளுமன்ற பாதுகாப்பு குறைபாடு குறித்து பிரதமர் விளக்கம் தர வேண்டும் என்றும் அத்துமீறியவர்களுக்கு பாஸ் வழங்கிய பா.ஜ.க. எம்.பி. மீது நடவடிக்கை தேவை என்றும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை மறுத்து இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதை ரத்து செய்ய வலியுறுத்தி, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை முதலில் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற பாதுகாப்பில் ஏற்பட்ட மிகப்பெரிய குறைபாடு குறித்து விவாதிக்க வலியுறுத்திய எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் 14 பேர் நேற்று சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து, நேற்று மக்களவை கூடிய உடன், சஸ்பெண்ட் உத்தரவை ரத்து செய்யக்கோரி எதிர்க்கட்சிகளின் இதர உறுப்பினர்கள் முழக்க மிட்டனர். பாதுகாப்பு குளறுபடி குறித்து பிரதமர் அவைக்கு வந்து விளக்கமளிக்க வும் வலியுறுத்தினர். மேலும், இதுதொடர்பாக விவாதிக்க திமுக, காங்கிரஸ் உள்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 23 நோட்டீஸ்களை வழங்கினர். இதற்கு அனுமதி மறுத்த சபாநாயகர், அவையை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைப்பதாக தெரிவித்தார்.

இதே விவகாரம் மாநிலங்களையிலும் எதிரொலித்தது. கூட்டம் தொடங்கிய உடனே சஸ்பெண்ட் நடவடிக்கையை கண்டித்து முழக்கமிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் அத்துமீறியர்களுக்கு நுழைவுச்சீட்டு வழங்கிய பா.ஜ.க. எம்.பி பிரதாப் சிம்ஹா மீது நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தினர். ஆனால், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிர்க்கட்சி எம்.பி.க்களின் தொடர் முழக்கத்தால் மாநிலங்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகள் எம்.பி.க்கள் 14 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதை கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர்.

நாடாளுமன்றத்தில் அத்துமீறி இருவர் புகுந்து புகை குண்டுகளை வீசிய விவகாரத்தில் உள்ள பாதுகாப்பு குறைபாட்டை கண்டித்தும், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா விளக்கமளிக்க கோரியும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினர். ஆனால், இதுகுறித்து விளக்கமளிக்க ஒன்றிய அரசு மறுத்தது. மாறாக எதிர்க்கட்சிகள் எம்.பி.க்கள் 14 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். சஸ்பெண்ட் நடவடிக்கையை கண்டித்து, எதிர்க்கட்சிகள் எம்.பி.க்கள், நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன்பாக தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற பாதுகாப்பில் ஏற்பட்ட மிகப்பெரிய குளறுபடி குறித்து பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டும், தவறு எங்கு நடந்தது என்பதை நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும், நாட்டின் ஜனநாயகம் அச்சுறுத்தலில் உள்ளாகி இருப்பதாகவும் பதாகைகளை ஏந்தியவாறு எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர்.

**கனிமொழி கருணாநிதி**

மக்களவை தி.மு.க. குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி அப்போது கூறியதாவது:-

எங்களால் மட்டுமே, நாட்டை பாதுகாக்க முடியும் என்று பா.ஜ.க.வினர் தொடர்ந்து கூறி வருகின்றனர். ஆனால், நாடாளுமன்றத்தைக்கூட அவர்களால் பாதுகாக்க முடிய வில்லை.

நாட்டில் என்ன நடந்தாலும் அதற்கு ஒன்றிய அரசுதான் பொறுப்பு நாட்டின் பாதுகாப்பில் குளறுபடி ஏற்பட்டால், அதற்கு ஒன்றிய அரசே பொறுப்பு பிரதமர் மோடியோ, உள்துறை அமைச்சரோ விளக்க மளிக்கதான் நாங்கள் கோருகிறோம்.

நாடாளுமன்றத்தில் முழக்கங்களை எழுப்பினாலே பெரும் குற்றமாக கருதி சஸ்பெண்ட் செய்கிறார்கள். நாடாளுமன்றத்திற்கு செல்ல முடியாததால் வெளியே நின்று போராடுகிறோம்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அறிக்கை அளிக்கும் வரை இந்த பிரச்சினையை தொடர்ந்து எழுப்புவோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டார்.

**திருச்சி சிவா**

நாடாளுமன்ற தாக்குதல் சம்பவம் குறித்து ஒன்றிய உள்துறை அமைச்சர் பதிலளிக்கும் வரை தங்களது போராட்டம் தொடரும் என்று மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த திருச்சி சிவா, நாடாளுமன்றத்தையே பாதுகாக்க முடியாதவர்கள், நாட்டு மக்களை எப்படி பாதுகாப்பார்கள்? என்று கேள்வி எழுப்பினார். நாடாளுமன்றத்தையும், எதிர்க்கட்சிகளையும் ஒன்றிய அரசு மதிப்பதில்லை என்றும், நாடாளுமன்றத்தில் பேச்சுரிமை இல்லாத சூழலை உருவாக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். தாக்குதல் நடத்தியவர்களுக்கு பரிந்துரைக் கடிதம் வழங்கிய பா.ஜ.க. எம்.பி. மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என்றும் திருச்சி சிவா கேள்வி எழுப்பினார்.

பேச்சுரிமையை தடுக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சி நாடாளுமன்ற தாக்குதல் சம்பவம் குறித்து உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்கும்வரை எங்களது போராட்டம் ஓயாது நாடாளுமன்றத்தையே பாதுகாக்க முடியாதவர்கள், நாட்டு மக்களை எப்படி பாதுகாப்பார்கள்?

நாடாளுமன்றத்தையும், எதிர்க்கட்சிகளையும் ஒன்றிய அரசு மதிப்பதில்லை. நாடாளுமன்றத்தில் பேச்சுரிமை இல்லாத சூழலை உருவாக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயற்சிக்கிறது. தாக்குதல் நடத்தியவர்களுக்கு பரிந்துரைக் கடிதம் வழங்கிய பா.ஜ.க. எம்.பி. மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என்று திருச்சி சிவா பேட்டியளித்தார்.

### நாட்டின் அதிகார மையத்தைக்கூட பாதுகாக்க முடியாதவர்கள்

# எப்படி நாட்டு மக்களுக்கு உரிய பாதுகாப்பைத் தருவார்கள்?

## ‘தினகரன்’ தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, டிச. 15 - பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களில் சிறு சம்பவங்கள் நடந்தால் கூட ‘சட்டம்-ஒழுங்கு’ சரியில்லை என மூச்சுமுட்ட கதறும் பா.ஜ.க.வினர் நாடாளுமன்றத்தில் அத்துமீறிய சம்பவம் விஷயத்தில் நாட்டின் அதிகார மையத்தைக் கூட பாதுகாக்க முடியாதவர்கள் எப்படி நாட்டு மக்களுக்கு உரிய பாதுகாப்பை தருவார்கள் என ‘தினகரன்’ நாளேடு 14.12.2023 தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-



தினகரன்

டிசம்பர் 14, 2023 வியாழக்கிழமை

மீண்டும் பாதுகாப்பு குளறுபடி

கடந்த 2001, டிச. 13-ஆம் தேதி நாடாளுமன்ற வளாகத்திற்குள் ஒரு மர்ம கார் நுழைந்தது. அதிலிருந்து 5 தீவிரவாதிகள் இறங்கி திடீர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்திய பாதுகாப்பு படை வீரர்களும் பதிலுக்கு தாக்குதல் நடத்தினர். இருதரப்பு தாக்குதலில் 5 தீவிரவாதிகளும் சுட்டு கொல்லப்பட்டனர். 7 பாதுகாப்பு படை வீரர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். சம்பவம் நிகழ்ந்து 22 ஆண்டுகள் ஆனதை அனுசரிக்கும் அதே நாளில், மற்றொரு பாதுகாப்பு குறைபாடான சம்பவம் பா.ஜ.க. அரசில் மீண்டும் நிகழ்ந்துள்ளது. இம்முறை நடந்தது வெளியே அல்ல... நாடாளுமன்றத்தின் உள்ளேயே! நாடாளுமன்றத்தில் நேற்று குளிர்கால கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்தபோது பார்வையாளர் மாடத்திலிருந்து இருவர் நாடாளுமன்ற அரங்கிற்குள் குதித்து ‘சர்வாதிகாரம் ஒழிக’ என கோஷமிட்டபடி, மஞ்சள் நிற புகையை சபையெங்கும் உமிழ விட்டபடியே ஓடினர். சுதாரித்த எம்.பி.க்கள், இருவரையும் பிடித்து பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைத்தனர்.

நாட்டின் மிக முக்கிய அதிகார மையமான நாடாளுமன்றத்தின் உள்ளேயே அசம்பாவிதம் நிகழ்த்த 2 பேர் நுழைந்திருக்கின்றனர். அதுமட்டுமின்றி வளாகப்பகுதியிலும் 2 பெண்கள் நுழைந்து பாஜ அரசுக்கு எதிராக கோஷமிட்டுள்ளனர். இது மிக, மிக, மிக, மிக மோசமான பாதுகாப்பு குளறுபடி என்றுதான் சொல்ல வேண்டும். ஒருவேளை வந்தவர்கள் கண்ணீர் புகைக்கு பதிலாக விஷப்புகையை பரவ விட்டிருந்தால் எம்பிக்களின் நிலை என்ன? பொதுவாக, நாடாளுமன்ற பார்வையாளர்களாக வருவதற்கு சில விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

★ 4 கட்ட பாதுகாப்பு சோதனைகளை முடிந்த பின்னரே பார்வையாளர் உள்ளே அனுமதிக்கப்படுவார்.


★ மெட்டல் டிடெக்டர், ஸ்கேனர் மூலம் பார்வையாளர் முழுமையாக பரிசோதிக்கப்படுவார்.

★ அவரது அடையாளங்கள், ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்படும்.

★ ஒரு எம்.பி.யின் பரிந்துரை கடிதம் இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார். அந்த வகையில், உள்ளே நுழைந்தவர்களில் ஒருவரின் அனுமதி பரிந்துரையில் கர்நாடக மாநிலம், மைசூரு தொகுதி பா.ஜ.க. எம்பி பிரதாப் சிம்ஹா பெயர் இடம் பெற்றிருப்பது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. 2 பேரிடமும் உச்சக்கட்ட பாதுகாப்பு சோதனை நடத்தப்பட்டதா? மெட்டல் டிடெக்டர், ஸ்கேனர் மூலம் பரிசோதிக்கப்பட்டனரா? எந்தவித ஆவணங்களுமின்றி இருவரும் அனுமதிக்கப்பட்டது எப்படி? இப்படி எண்ணற்ற கேள்விகள் ஒவ்வொரு இந்திய குடிமகனிடம் எழுந்துள்ளது.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், இச்சம்பவத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசின் பாதுகாப்பு குளறுபடியே காரணமென குற்றம் சாட்டியுள்ளனர். பா.ஜ.க. ஆட்சி செய்யாத தமிழகம் உள்பட பல மாநிலங்களில், சிறு சம்பவங்கள் நடந்தாலும் ‘சட்டம், ஒழுங்கு சரியில்லை’ என பா.ஜ.க. தேசிய தலைவர்கள் முதல் லோக்கல் தலைவர்கள் வரை மூச்சு முட்ட கதறுவார்கள். இந்த சம்பவத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? மார்கழியை வரவேற்க மஞ்சள் பொடி வீச்சு என்றா? நாட்டின் அதிகார மையத்தை கூட பாதுகாக்க முடியா தவர்கள், எப்படி நாட்டு மக்களுக்கு உரிய பாதுகாப்பை தரப்போகின்றனர் என்ற கேள்வி, ஜனநாயகத்தை நேசிக்கும் குடிமகன்கள் மனதில் ஓங்கி ஒலிக்கிறது!

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் நேற்று முன்தினம் (14.12.2023) திருநெல்வேலி கருங்குளம் பெருமாள் கோவிலில் நடைபெற்ற அவரது மூத்த சகோதரர் பாஸ்கரன் மகன் சுரேந்தர் – ரம்யா சக்தி திருமணத்தில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

### கொடநாடு கொலை - கொள்ளை வழக்கு

# எடப்பாடி பழனிசாமி நேரில் ஆஜராக வேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, டிச. 16 - கொடநாடு கொலை கொள்ளை வழக்கில், சாட்சியங்களை பதிவு செய்வதற்காக மாஸ்டர் நீதிமன்றத்தில் ஆஜராக எடப்பாடி பழனிசாமிக்கு அறிவுறுத்தல் வழங்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடநாடு கொலை கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி வீடியோ வெளியிட்ட டெல்லியை சேர்ந்த பத்திரிகையாளர் மேத்யூ சாமுவேல், வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சயான் மற்றும் வாளையார் மனோஜ் ஆகியோருக்கு எதிராக 2019ஆம் ஆண்டு தற்போது அ.தி.மு.க. பொது செயலாளராக உள்ள எடப்பாடி பழனிசாமி, ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்டஈடு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக வழக்கை மாஸ்டர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாஸ்டர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாது எனவும், தமது வீட்டில் சாட்சியத்தை பதிவு செய்ய வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டுமெனவும் கோரி எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை ஏற்ற உயர் நீதிமன்றம், நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க எடப்பாடி பழனிசாமிக்கு விலக்கு அளித்தோடு, இந்த நடைமுறையை அவரது வீட்டில் மேற்கொள்வதற்காக வழக்கறிஞர் ஆணையராக எஸ். கார்த்திகை பாலனை நியமித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து சாமுவேல் மேத்யூ சாமுவேல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு வழக்கு நீதிபதிகள் ஆர். மகாதேவன், முகமது ஷஃபிக் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், வழக்கின் விசாரணையை ஒத்திவைக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

அப்போது, மாஸ்டர் நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி ஆஜராவதில் இருந்து விலக்களிக்க வேண்டும் என கூறக்கூடிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என தெரிவித்த நீதிபதிகள், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என ஏற்கனவே கூறியதை மீண்டும் நினைவுப்படுத்துவதாக கூறினர்.

மேலும், சென்னை உயர்நீதிமன்றம் சிறப்பான பாதுகாப்புகளை வழங்கி வருவதால், எடப்பாடி பழனிசாமி மாஸ்டர் நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தல் வழங்க அவர் தரப்பு வழக்கறிஞருக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜனவரி 5ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.



தமிழ்நாட்டிற்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்திய மிக்ஜாம் புயல் வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கொள்கை மற்றும் திட்டமிடல் ஆலோசகர் குணால் சத்தியார்த்தி அவர்கள் தலைமையிலான ஒன்றியக் குழுவினர் நேற்று முன்தினம் (14.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகளைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அம்முண்டியில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை!

## அமைச்சர்கள் துரைமுருகன் - ஆர்.காந்தி துவக்கி வைத்தனர்!

வேலூர், டிச. 16 -

வேலூர்மாவட்டம், அம்முண்டியில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இதன் கரும்பு அரவை துவக்க விழா மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் தலைமையில் நடந்தது.

இதில் தமிழக நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி துறை அமைச்சர் காந்தி ஆகியோர் கரும்பு அரவையை துவங்கினார்கள். இதில் கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை பதிவாளர் நர்மதா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆற்காடு ஜெ.எல்.ஈஸ்வரப்பன், குடியாத்தம் அமலுவிஜயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில் திரளான விவசாயிகள் பொதுமக்கள் தொழிலாளிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் கழக பொதுச் செயலாளர், நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

கவர்னர், முதல்வரை பேச்சு வார்த்தைக்கு அழைத்தாரா, இல்லையா என எனக்கு தெரியாது. சென்னை சென்ற பின்னர் தான் தெரிய வரும். நீண்டகாலமாக நீர் நிலையை உருவாக்க தேடி வருகிறோம். சென்னையில் ராமன்சேரியில் பெரிய டேம் கட்டலாம். ஆனால் ஊர் மக்கள் அங்கு அளக்கச் சென்றால் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆகவே பூண்டி மற்றும் செம்பரம் பாக்கம் ஏரியின் கொள்ளளவை ஒருஅடி உயர்த்த உள்ளோம். நீதிமன்ற உத்தரவுக்கு பின்னர் அதிக நீர் நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றியுள்ளோம். ஆனால் அங்கு இருக்கும் மக்கள் அகற்றவிடாமல் தடுக்கின்றனர். அவர்களுக்கு வேறு இடம் வழங்காமல் அவர்களை எப்படி காலி செய்ய முடியும்.

அரசியல் தலையீடும் உள்ளது. ஊர் மக்கள் தலையீட்டாலும் ஆக்கிரமிப்பை அகற்ற முடியவில்லை. பாராளு மன்றத்தில் நேற்று முன்தினம் இருவர் அத்துமீறி துணிந்து குதித்துள்ளனர். உள்ளே எப்படி புகைக் குண்டைக் கொண்டு சென்றார்கள் என தெரியவில்லை. ரூ.6 ஆயிரம் புயல் நிவாரணம் தகுதி பார்த்து கழிப்பதாக எடப்பாடி சொல்வது குறித்து கேட்டதற்கு, அவர் எதை யாவது சொல்வார் என கூறினார்.

நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் தயாநிதி, மாநகராட்சி துணை மேயர் எம். சுனில் குமார் காட்பாடி ஒன்றிய செயலாளர்கள் எஸ்.தணிகாசலம், எஸ்.சரவணன், சி. ரவி, கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெடுஞ்சாலைத் துறையில் - 10 கோட்டங்களில்

# கருணை அடிப்படையில் 10 பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

சென்னை, டிச.16 -

சென்னை தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறையில், பணியின்போது, இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

நெடுஞ்சாலைத்துறையில், பணியின்போது மறைந்த ஈப்பு ஒட்டுநர், சாலைப் பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், 10 கோட்டங்களில் பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்ட, 2 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 8 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை, நேற்று முன்தினம் (14.12.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி.ந.சாந்தி மற்றும் நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆர்.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பண்பாட்டு அமைப்புகளை வளர்த்தெடுக்க

# ஒன்றிய அரசிடம் நீண்ட கால திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச.16 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், பண்பாட்டு நிறுவனங்களை காப்பாற்றவும், பண்பாட்டு அமைப்புகளை வளர்தெடுக்கவும், ஒன்றிய அரசிடம் ஏதேனும் நீண்டகாலத் திட்டங்கள் உள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் பண்பாட்டுத்துறை அமைச்சர் கிஷண் ரெட்டியிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்

ஒன்றிய அரசின் பண்பாட்டுத்துறை அமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:



சமீபத்தில் நடந்து முடிந்த ஜி20 மாநாட்டின்போது, இந்திய தலைநகரில் பண்பாட்டிற்கென பணிக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது எனவும், அனைத்து நாடுகளுடனும் இது குறித்து கலந்து விவாதிக்கப்பட்டது என்றும், காசி பண்பாட்டு முன்னேற்பாடுகள் என்ற தலைப்பின் கீழ், பண்பாட்டுக்கூறுகளை வளர்த்தெடுக்கவும், மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்தும் விரிவாக ஜி20 மாநாட்டில் விவாதிக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது என்றும், யுனெஸ்கோ, ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது என்றும், அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், பாட்டியாலா, நாக்பூர், உதய்பூர் வாரணாசி, கொல்கத்தா, திமாபூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஏழு இடங்களின் அமைந்துள்ள பிராந்திய பண்பாட்டு மையங்களின் மூலம் இந்தியாவின் அனைத்து கலை அம்சங்களையும், கலைக்கூறுகளையும், மக்களின் மத்தியில் வளர்த்தெடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசின் பண்பாட்டுத்துறை மேற்கொண்டு வருகிறது என்றும், ஒவ்வொரு ஆண்டும் பிராந்திய பண்பாட்டு மையங்களின் உதவியுடன், 42-க்கும் மேற்பட்ட பிராந்திய விழாக்களை பல்வேறு நகரங்களில் நடத்தி வருவதுடன், கலைஞர்களின் வாழ்வாதாரத்திற்கான வகையில், இளம் கலைஞர்களை ஊக்குவித்தல், கலைக்கிராமங்கள், தேசிய பண்பாட்டு விழாக்கள் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர் என்றும்,

மேலும், பயிற்சி வகுப்புகள், பொருட்காட்சிகள், மகாநாடுகள், கருத்தரங்குகள், ஆகியவற்றில் கலைஞர்கள் பங்களிப்பு உறுதி செய்யப்பட்டு பிராந்திய கலைஞர்களின் வாழ்வாதாரத்தை பெருக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசின் பண்பாட்டுத் துறை எடுத்து வருகிறது என்றும்,

ஜவுளித்துறையில் கைத்தொழில் வளர்ச்சி ஆணையரின் வழிகாட்டுதலின்படி இந்திய கைத்தொழில் கலைஞர்களின் வாழ்க்கையை மேம்படுத்த தேவையான திட்டங்களையும் ஒன்றிய அரசு நிறைவேற்றி வருகின்றது என்று, பண்பாட்டுத்துறை அமைச்சர் கிஷண் ரெட்டி, மக்களவையில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

# குழந்தைகளைத் தத்தெடுக்க எளிய, புதிய நடைமுறை!

## டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு - ஒன்றிய அரசு விளக்கம்!

புதுடெல்லி, டிச. 16 -

குழந்தைகளைசட்டப் பூர்வமாகதத்தெடுப்பதில் உள்ள சிரமங்கள், அதைப்போக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி மாநிலங்களைவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.



இதற்கு ஒன்றிய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி அளித்த பதில்:

கடந்த நான்காண்டுகளைக் கணக்கிட்டால் இந்தியாவுக்குள்ளேயே சராசரியாகஆண்டுக்கு 3000 குழந்தைகளும், வெளிநாட்டினருக்காக ஆண்டுக்கு சுமார் 400 குழந்தைகளும் தத்து எடுக்கப்படு கிறார்கள்.

குழந்தைகளை தத்தெடுக்க விரும்புவோர், தத்தெடுக்கும்நடைமுறைகளைச் செய்யும் ஏஜென்ஸி கள், தத்தெடுக்கும் நடைமுறைகளை கண்காணித்து அமல்படுத்தும் ஆணையம் ஆகியோர் சந்திக்கும் பிரச்னைகள், சிக்கல்களை மனதில் வைத்து அவற்றைத்தீர்க்கும் வகையிலும்; சிறுவர்களுக்கான பாதுகாப்பு தொடர்பான சட்டத்துக்குஉட்பட்டும் 2022ம் ஆண்டு தத்தெடுப்பது தொடர்பான வழிமுறைகள் மற்றும் விதிமுறைகளை மத்திய அரசு வகுத்து வெளியிட்டது.

அந்தப் புதிய விதிமுறைகளின்படி, முன்பு நீதிமன்றங்கள்தான்தத்தெடுப்பது தொடர்பான ஆணையை வழங்கமுடியும் என்பதை மாற்றி, மாவட்ட ஆட்சியர்களே அந்த ஆணையை வழங்க வழிவகை செய்யப்பட்டது. அதேபோல குழந்தையை தத்தெடுக்க விரும்பும்தம்பதிகளுக்குஅதிகபட்ச வயது 85 என்றும்;

(இரண்டு வயதுக்கு குறைவான குழந்தையை தத்தெடுக்கும்) தனிநபர்களுக்குஅதிகபட்ச வரம்பு 40 வயது என்றும் நிர்ணயம் செய்யப்பட்டது.

இதுதவிர, ஒரு குழந்தையை தத்தெடுக்கும் முன்பாகவும், தத்தெடுக்கும்போதும், அதன் பிறகும் என ஒவ்வொரு கட்டத்திலும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும்கவுன்சிலிங் முறையில் ஆலோசனையும், அறிவுரையும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சட்டப்பூர்வமானஆவணங்களைபதிவேற்றம் செய்தல், தத்துப்போகும் குழந்தையின்மருத்துவப் பரிசோதனை மற்றும் அது தொடர்பானசான்றுகளை வழங்குதல், தத்தெடுக்கும் ஆவணங்களுக்கு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பு ஒப்புதல் வழங்கும் காலம் போன்றவற்றுக்கு ஏழு நாட்கள் முதல் பதினைந்து நாட்கள் வரையிலான காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சட்டப்பூர்வமாக தத்தெடுக்கும் முன்பாக சம்பந்தப்பட்ட குழந்தையை ஐந்தாண்டுகள் பராமரித்து அதன்பிறகு சான்று பெற்ற பிறகே தத்தெடுக்க முடியும் என்ற கால அளவு இரண்டாண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.தத்தெடுக்கும் பெற்றோர் பிற்காலத்தில்சந்திக்கும்பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையிலும் விதிமுறைகள் மாற்றப்பட்டு, சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைகளைத்தத்தெடுக்கும் நடைமுறைகளை எளிதாக்கவும், வெளிப்படைத்தன்மையைஉறுதி செய்யவும்CARINGS என்ற பிரத்யேகப்போர்ட்டல் ஒன்று எல்லோரும் கையாளும் வகையில் எளிதான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. தேவையற்ற கால தாமதங்கள் இதன் மூலம் தவிர்க்கப்படும்.

இந்தப்போர்ட்டல்உருவாக்கப்பட்ட பின்பு, குழந்தையைத்தத்தெடுக்கும்நடைமுறைகளில்எந்தப்பிரச்சினையும் இருப்பதாக யாரிடம் இருந்தும் எந்தப்புகாரும் சம்பந்தப்பட்ட எவருக்கும் வரவில்லை.

இவ்வாறு அமைச்சர் ஸ்மிருதி இராணி பதிலளித்தார்.

# எல்லையில்லாத மழை வெள்ளம்! அல்லல் அகற்றும் அரசு!

**கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை (15)**



என்பது அய்யனின் திருக்குறள். முதன்மையாக எடுப்பதைச் சொல்லாமல் கெடுப்பதைச் சொல்லி இருக்கிறார் குறளாசான். கிராமங்களில் சாதாரணமாக ஒரு பழமொழி “பேய்ஞ்சும் கெடுக்கும் ஓஞ்சும் கெடுக்கும் மழை” என்பர். மழையின் காலங்களின் கணக்கே இது தான்!


சென்னையிலும் சுற்றுப்புறங்களிலும் சென்ற 3ஆம் நாள் இரவில் இருந்து 4ஆம் நாள் இரவு முழுவதும் பெய்த மிக்ஜாம் புயல் மழை சென்னை நகரையே எல்லையில்லா அல்லலுக்கு உட்படுத்திவிட்டது. சென்னைக் கடல் கூட இந்த மழை வெள்ளத்தை உள்வாங்க மறுத்து விட்டது. அந்த அளவுக்கு மிகை மழை.

புறநகர்ப் பகுதிகளிலெல்லாம் உள்ள தெருக்கள் அனைத்தும் குளங்கள் போல் ஆகிவிட்டன. ஒவ்வொரு இல்லத்துள்ளும் பெரும் பகுதி தரைத் தளங்களின் மேல் மட்டுமல்ல, முதல் மாடி வரையும் நீர் வெள்ளம் புகுந்து விட்டது. மக்களின் கண்ணீர் வெள்ளம், புயல் மழை வெள்ளத்தோடு போட்டி போடுமளவுக் குத் துன்ப துயர்கள் மீக்கெழுந்து ள்ளன.

யாம் குடியிருக்கும் சாலிகிராமம் பகுதியில் அரசு முன்பே நீர் தேங்காமல் வெளியேறுமாறு வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளதால் எவ்வளவு மழை பெய்தாலும் வடிந்து போகும்.

ஆனால், இந்தப் பெருமழையில் இரவு இரண்டு மணிக்குக் குளியலறை நீர் செல்லும் வழியிலிருந்து நீர் வர ஆரம்பித்தது. யானும் இரவு இறைத்து இறைத்துப் பார்த்து இளைத்து விட்டேன். அகவை எண்பத்தொன்பது. உடம்பு கொஞ்சம் இளமையாக இருப்பதால் தாக்குப் பிடிக்க முடிந்தது.

சிறிது நேரத்தில் பார்த்தால் வீட்டுக்குள் வாசல் வழியில் தண்ணீரும் வர கீழே வைத்திருந்த புத்தகங்களெல்லாம் நீர் மேவியது. வேதனையாக இருந்தது. ஒன்றும் செய்ய இயலா நிலையில் படுத்திருந்த கட்டில் மேலேயே ஐந்தாம் தேதி காலை வரை பெருஞ்சோதனைகளை ஏற்றேன். பின்பு அரசு முன்பு வடிகால் வசதி செய்யப்பட்டிருந்ததால் நீர் வடிந்தது.



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**

இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் அரசு வடிகால் வசதி படைத்திருந்த பகுதிகளிலேயே இந்த நிலை என்றால், புறநகர்களில் பல இட ங்களில் நீர் தங்கும் தாழ்வுப் பகுதிகளில் வீடுகட்டி வாழும் பகுதிகளில் நிலையைச் சொல்ல வேண்டுமா?

இந்தப் புயல் வெள்ளத்தின் தாக்குதலைத் தடுப்பதற்காகத் தமிழக அரசு முன்பே போதிய முன்னெச்சரிக்கை தந்துள்ளது. அரசுத் துறை இயக்கங்கள் அனைத்தும் முடுக்கிவிடப்ப ட்டன.

நம் மாண்புமிகு முதன்மை முதல்வர், அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் வெள்ளப் பாதிப்பு பணிகளை உத்வேகமாக மேற்கொள்ள வலியுறுத்திக் கொண்டே இருந்தார். சென்னை நகரத் தந்தை, அமைச்சர்கள், அதிகாரிகள், தூய்மைப் பணியாளர்கள் எல்லாம் களத்தில் இறங்கி இரவு பகலாக ஊணுறக்கமின்றி அதிகாரிகளோடு, மக்கட்கு அனைத்துத் தேவைகளையும் செய்து கொண்டுள்ளனர். உண்பொருள், மின் விநியோகம் தேவைக்குரிய உதவிகள் அனைத்தும் இடைவிடாது வழங்கப்பட்டு வருகிறது. நீர்த்தேக்கங்களிலிருந்து திட்டமிட்டு நீரை வெளியேற்றி மேலும் பெரு வெள்ளப் பெருக்கு தடுக்கப்பட்டுள்ளது.

நம் முதல்வரே வெள்ளப் பெருக்குள்ளப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வு செய்து, உதவிகளை வழங்கி வருகிறார். மக்களோடு மக்களாக நம் மாமுதல்வர் மு.க.இஸ்டாலின் கண்ணயராமல் காப்புக் கடும் பணி செய்கிறார்.

ஒன்றிய அரசிலிருந்தும் மாண்புமிகு நம் பிரதமர் மோடி அவர்கள் பாதுகாப்பு அமைப்பு அமைச்சர் இராசுநாத் சிங்கை நேரில் அனுப்பி வைத்து, அவரும் வந்து வெள்ளப் பகுதிகளைப் பார்வை யிட்டு நம் முதல்வரைச் சந்தித்து, மக்கள் துயர் தீர்க்கும் போதிய நிதியுதவிகளை தருவதாக வாக்குறுதி அளித்துள்ளனர். வாக்குறுதியை தேவைக்கேற்ப செயலுறுதி செய்ய வேண்டும்.

எனவே, இந்தத் தாளாத துன்ப, துயர நிலையில், போதிய நடவடிக்கைகள் எடுத்து, மக்களின் உயிர் காத்த முதல் வரையும் அரசையும் பாராட்டா விட்டாலும் குறை சொல்லி அரசியல் செய்யாமல், பொறுப்புணர்வோடு வெள்ளத்தில் மக்கள் படும் பாட்டை நினைந்து, அனைத்துக் கட்சியினரும் ஒற்றுமை யோடு, செயலாக்கம் காண வேண்டும்.

**தன்குற்றம் நீக்கிப்பிறர் குற்றம் காண்கிற்பின் என்குற்றம் ஆகும் இறைக்கு (குறள் 436)**

என்ற அய்யனின் வாக்குப்படி, இப்போது குறை கூறுபவர்கள், அவர்கள் ஆட்சிக் காலத்தில் என்ன செய்தார் கள், எப்படி நடந்தார்கள் என்ற தன் குற்றத்தை உணர்ந்து நியாய நேர்மை யோடு அரசோடு இணைந்து நம் மக்கள் அல்லலைத் தீர்க்குமாறு அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண் டும். நாம் என்னதான் தக்க முன்னேற்பாடு களைச் செய்தாலும் இயற்கை வலிது இந்த இயற்கைச் சீற்றங்களிலிருந்து மக்கள் வாழ வருமுன் காப்போம் திட்டங்களை மேற்கொ ள்ளும் நம் தமிழ்நாடு முதல்வர் முயற்சிகள் வெல்லட்டும்! மக்கள் முதல்வரின் மாந்த நேயத்தைக் கண்ணய ராக் காக்கும் பணியைக் காலமெல்லாம் சொல்லட்டும்!

‘தேர்தல் ஆணையர் நியமன மசோதா’

# தேர்தல் முறை ஜனநாயகத்தை அடியோடு வேரறுக்கும்!

## “தீக்கதிர்” தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, டிச. 16 -

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தேர்தல் ஆணைய நியமன மசோதா இதுவரை தேர்தல் முறையில் இருந்து வந்த ஜனநாயகத்தை அடியோடு வேரறுக்கும் என்று 14.12.2023 அன்று ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் குற்றம் சாட்டியுள்ளது.


தீக்கதிர்
2023 டிசம்பர் 14 வியாழக்கிழமை
ஜனநாயகத்தை வேரறுக்கும்!

அத்தலையங்கம் வருமாறு:-

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் “தேர்தல் ஆணையர் நியமன மசோதா” இதுவரை தேர்தல் முறையில் இருந்து வந்த ஜனநாயகத்தை அடியோடு வேரறுக்கும்.

ஏற்கனவே நீதிபதி கே. எம்.ஜோசப் தலைமையிலான உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு “பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் பரிந்துரையின்படி தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும் என கூறியி ருந்தது. ஆனால் அதற்கு நேர்மாறாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாகப் பிரதமர் மற்றும் அவரால் நியமிக்கப்படும் அமைச்சர், எதிர்க்கட்சி தலைவர் பரிந்துரைப்பவர்கள் தேர்தல் ஆணை யர்களாக நியமிக்கலாம் எனத் திருத்தம் செய்திருக்கிறது.

இதில் எப்படி மாற்றுக் கருத்திற்கு இடமிருக்கும்? 3 பேர் குழுவில் இருவர் ஆளும் கட்சி யைச் சேர்ந்தவர்கள் என்றால் அதுவே பெரும்பான்மை. அதை விட மிக ஆபத்தானது. தேர்தல் ஆணையர்கள் பாரபட்சமாகவோ அல்லது மோசடி, தவறு ஏதும் செய்தாலோ அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியாது. மாறாக நாடாளுமன்றத்தின் மூலம் உச்சநீதி மன்ற நீதிபதியை நீக்கும் நடைமுறையைத் தான் பின்பற்ற வேண்டும். இது நீதித்துறைக்கு மாற்று ஏற்பாடு ஆகாதா?

இந்த மசோதா கொண்டு வந்ததன் பின்னணி யைப் பார்த்தாலே இதன் சூட்சுமத்தை புரிந்து கொள்ள முடியும். 2014இல் மோடி பிரதமரான பின்பு வாக்கு இயந்திர பாதுகாப்பு விதிமுறை களை மீறி சில குறிப்பிட்ட தனியார் நிறுவ னங்கள் மற்றும் அதிகாரிகள் மூலம் தேர்தல் ஆணையம் பாஜகவிற்கு உதவியது அம்பலமானது. 2019 நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்கிற்கும் எண்ணப்பட்ட வாக்கிற்கும் 373 தொகுதிகளில் வேறுபாடு இருந்தது. இதுவரை தீர்க்கப்பட வில்லை. சிக்கிம் மாநிலத்தில் ஊழல் வழக்கில் 1 வருடம் சிறைத் தண்டனை பெற்ற பிரேம்சிங் தாமங் பா.ஜ.க.வுடன் கைகோர்த்தார். உடனே 6 ஆண்டுகள் போட்டியிட முடியாது என்ற தேர்தல் விதியை 1 வருடம் 1 மாதம் என மாற்றி மோடிக்கு ஆள் பிடித்து கொடுத்து, ஆட்சியையும் பகிர்ந்து கொடுத்தது.

தேர்தல் பத்திரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த வரும், மக்களிடையே மதரீதியான பிளவை ஏற் படுத்திய மோடி, அமித்ஷாவைக் கண்டித்த தேர்தல் ஆணையர்களில் ஒருவரான அசோக் லவசா ஓரங்கட்டப்பட்டு, தலைமைத் தேர்தல் ஆணை யராக வரவிடாமல் தூக்கியடிக்கப்பட்டார். உச்ச நீதிமன்றம் தலைமைத் தேர்தல் ஆணையர் தலை ஆட்டுபவராக இருக்கக் கூடாது என்றது. ஆனால் மோடி அரசோ தேர்தல் ஆணையத்தையே சங்பரிவாரின் தலைமையகமாக மாற்றத் துடிக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) எண்ணூர் பகுதியில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவு அகற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) எண்ணூர் பகுதியில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவு அகற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னை-எண்ணூரில்

# மழை பாதித்த இடங்களில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## எண்ணெய்ப் படலம் படிந்துள்ள இடத்தையும் பார்வையிட்டார்!

**சென்னை, டிச.16-**

**சென்னை எண்ணூரில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

**எண்ணெய் படலம் படிந்துள்ள இடத்தையும் பார்வையிட்டார். மழையால் மீன வர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் கேட்டறிந்தார்.**

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில், மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து பார்வையிட்டு வருவதறிவோம்!

அதன் தொடர்ச்சியாக, எண்ணூரில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.

எண்ணூர் பகுதியில் கடலில் ஏற்பட்டுள்ள எண்ணெய் கசிவை அகற்றுவதற்காக தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் துறை சார்பில், ஏற்படுத்தப்பட்டுள்ள எண்ணெய் கசிவு மேலாண்மை ஒருங்கிணைப்பு மையத்தையும் பார்வையிட்டார்.

எண்ணெய் படலம் அகற்றப்பட்டதன் விவரங்கள் அடங்கிய புகைப்படத்தையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார். தொடர்ந்து, எண்ணூர் முகத்துவார பகுதியையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, நெட்டுக்குப்பம் பகுதியில் வந்து ஆய்வு செய்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து மீனவப் பெண்களிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், கே.பி.சங்கர், மேயர் பிரியா, மண்டல குழுத் தலைவர் தனியரசு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### ‘மிக்ஜாம்’ புயலால் வேளச்சேரியில் விபத்து:

# மரணமடைந்த தொழிலாளர்கள் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகை!

## தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

*சென்னை, டிச.16-*

*தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் மிக்ஜாம் புயலினால் விபத்து மரணமடைந்த தொழிலாளர் ஆர்.ஜெயசீலன் குடும்பத்தாருக்கு இழப்பீட்டு தொகை ரூ.15,49,625/ மற்றும் எஸ்.நரேஷ் குடும்பத்தாருக்கு இழப்பீட்டு தொகை ரூ.16,85,000/க்கானஉத்தரவுகள்வழங்கினார்.*

*அதன் விபரம் வருமாறு:-*

*மிக்ஜாம் புயலினால் பெய்த கனமழையின் காரணமாக சென்னை32 வேளச்சேரியில் மெசர்ஸ்.இந்துஜா லேலண்ட் பைனான்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் கட்டுமான பணிக்காக கிரீன் டெக் ஸ்ட்ரக்சுரல் கன்ஸ்டரக்ஷன் என்ற ஒப்பந்ததாரர் நிறுவனம் EarthWork செய்யும் பணி மேற்கொண்டு வந்ததாகவும், இப்பகுதியில் கடந்த 04.12.2023 காலை 7.00 மணியளவில் திடீரென மண்சரிவு ஏற்பட்டதாகவும், இதனால் ஏற்பட்ட பள்ளத்தில் கிரீன் டெக் ஸ்ட்ரக்சுரல் கன்ஸ்டரக்ஷன் என்ற நிறுவனத்தின் உதவி மின் பொறியாளர் ஆர். ஜெயசீலன் மற்றும் கட்டுமானப் பணியை ஒட்டி அமைந்திருந்த கேஸ் பங்கின் EB Roomல் இருந்த கேஸ் பங்க் ஊழியர் எஸ்.நரேஷ் (வயது 21) த/பெ.சங்கர் என்பவர் அந்த கட்டிடத்துடன் பள்ளத்தில் மூழ்கி விட்டனர். பின்னர் மழைநீர் வடிந்த பின் 08.12.2023 அன்று இருவரும் பிணமாக மீட்கப்பட்டனர். தொழிலாளர் மற்றம் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க இவ்விரு தொழிலாளர்களின் பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து குறித்து சென்னை, தொழிலாளர் இணை ஆணையர்1 அவர்கள் முன்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு 1923 ஆம் ஆண்டு பணியாளர் இழப்பீடு சட்டத்தின் கீழ் திரு.ஆர்.ஜெயசீலன் அவர்களின் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.15,49,625/ம் எஸ்.நரேஷ் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.16,85,000/ம் பெற்று தர நடவடிக்கை எடுக்கப்பட்டது.*

*முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை, வேளச்சேரியில் மிக்ஜாம் புயலினால் விபத்து மரணமடைந்த தொழிலாளர்களுக்கு பணியின்போது ஏற்பட்ட விபத்து மரணத்திற்கான இழப்பீட்டு தொகை ரூ.15,49,625/க்கான உத்தரவினை ஆர்.ஜெயசீலனின் மனைவி திருமதி.மஞ்சுவிடமும் இழப்பீட்டுத் தொகை ரூ.16,85,000/க்கான உத்தரவினை எஸ்.நரேஷ் தந்தை கே.சங்கரிடமும் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர், பொன்.குமார் அவர்கள் சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி. சி. ஹேமலதா மற்றும் தொழிலாளர் இணை ஆணையர் தே.விமலநாதன் கலந்து கொண்டனர்.*



சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (15.12.2023) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன் மிக்ஜாம் புயலினால். விபத்து மரணமடைந்த தொழிலாளர் ஆர். ஜெயசீலன் குடும்பத்தாருக்கு இழப்பீட்டுத் தொகை ரூ.15,49,625/ கான உத்தரவை வழங்கினார். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் பொன். குமார், கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி சி. ஹேமலதா,தொழிலாளர் துணை ஆணையர் (பணிக் குழு மற்றும் பொது) தே.விமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை பகுதியில் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானத்தின் கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார். நெடுஞ்சாலைத்துறை அரசுச்செயலாளர், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் .கோ.தளபதி ஆகியோர் உடன் உள்ளனர்.

# ‘அயலகத் தமிழர் தினம் 2024’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஜன 12 - அன்று நடைபெறுகிறது!

சென்னை, டிச.16-

“அயலகத் தமிழர் தினம் 2024” ஜனவரி 12, 2024, சென்னை வர்த்தக மையத்தில் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் தொழில்நுட்பம், விளையாட்டு மற்றும் மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 ஆம் நாள் அயலகத் தமிழர் தினமாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்ததன் அடிப்படையில் 2022 மற்றும் 2023இல் அயலகத் தமிழர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து மூன்றாம் ஆண்டாக “அயலகத் தமிழர் தினம் 2024” 11.01.2024 & 12.01.2024 ஆகிய இரண்டு நாட்களில், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் “தமிழ் வெல்லும்” என்ற கருப்பொருளில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், அமர்வுகள், சிறப்பு கண்காட்சிகளுடன், நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் (Chennai Trade Centre) சிறப்பாக நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியை மேலும் சிறப்பிக்கும் விதமாக, தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய 8 பிரிவுகளில் சிறந்து விளங்கும் தமிழர்களுக்கு,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரங்களால் “அயலகத் தமிழர் தினத்தில்” விருது வழங்கி கவுரவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, அயல்நாடுகளில் தமிழ் இலக்கியம், கல்வி, சமூக மேம்பாடு, மகளிர், வணிகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு, மருத்துவம் ஆகிய எட்டு துறைகளில் தலைசிறந்து விளங்கும் தமிழர்கள் அயலகத் தமிழர் நலத்துறையின் வலைதளத்தின் (https://nrtamils.tn.gov.in/en/) வாயிலாக, விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அயலகத் தமிழர் தினத்தில் பங்கேற்பது, மற்றும் நிகழ்வுகள் தொடர்பான பிற விவரங்களுக்கு (https://nrtamils.tn.gov.in/en/) கொள்ளப்படுகிறது. அயலகத் தமிழர் நலத்துறையின் வலைதளத்தின் வாயிலாக அறிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### ஆளுநராக இன்றி - தமிழிசை சௌந்தரராஜன்

# பா.ஜ.க. தலைவராகவே செயல்பட்டு வருகிறார்!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

*புதுக்கோட்டை, டிச.16 -*

*புதுக்கோட்டை அடுத்த திருவேங்கைவாசல் விளக்கு பகுதியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:*

*தமிழ்நாட்டில் ஆளுநர் மாளிகை இருக்கக்கூடிய ஒரு தெருவில் நடந்த சம்பவத்திற்கு சட்டம் ஒழுங்கு கெட்டுள்ளது. தேசிய புலனாய்வு விசாரணை தேவை என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் தற்போது நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவம் கண்டிக்கத்தக்கது. இந்திய இறையாண்மைக்கு எதிராக எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் முதல் குரல் எழுப்பக் கூடியவர் தமிழ்நாடு முதலமைச்சர். இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையானவர். தேச நலன் காக்கப்படுவதில் தி.மு.க.விற்கு மாறுபட்ட கருத்து கிடையாது.*

*அன்றைக்கு தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியவர்கள் இன்று எந்த அமைப்பை அழைக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை.*

*இது நாடாளுமன்றத்திற்குள்ளேயே நடந்துள்ளது என்பது கண்டிக்கத்தக்கது என்று சொன்னாலும் கூட மிகுந்த பாதுகாப்பை மீறி நாடாளுமன்றம் தாக்குதல் நடைபெற்ற 21 ஆம் ஆண்டு அனுசரிப்பு தினத்தில் அந்த நாளில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் மிக மிக அசிங்கம் என்று தெரிந்தும் பாதுகாப்பு கோளாறு எப்படி ஏற்பட்டது. எப்படி உள்ளே இருவர் சென்று கலர் புகை குண்டை எடுத்து செல்ல அனுமதித்தனர். இதையெல்லாம் விசாரணை அமைப்பு தான் கண்டுபிடித்து சொல்ல வேண்டும். உள்ளேயே சதி நடந்ததா வெளியே சதி நடந்ததா யாருக்கு தொடர்புள்ளது இதையெல்லாம் எந்த விசாரணை அமைப்புகள் விசாரிக்கப் போகிறதோ அந்த அமைப்புகள் கண்டுபிடித்து சொல்ல வேண்டும். நல்ல தீர்ப்பு நாட்டு மக்களுக்குக் கிடைத்தால் சரி. எப்போதும் ஒரு கட்சியின் எம்.பி. அனுமதி கடிதம் கொடுக்கும் போது தனக்கு நன்றாக அறிமுகமானவர்களுக்கு தான் கொடுப்பது வழக்கம். ஆனால் இந்த விவகாரத்தில் எப்படி பா.ஜ.க. எம்பி கொடுத்தார் என்று தெரியவில்லை.*

*நான்கு பேர் ஆறு பேர் என்றெல்லாம் கூறுகிறார்கள் இவர்கள் அனைவரும் வெவ்வேறு மாநிலங்களை சேர்ந்தவர்கள். அவர்கள் எவ்வாறு ஒன்று கூடினார்கள் என்பது வியக்கத்தக்க ஒன்று. அவர்களுக்கு எவ்வாறு கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த மைசூர் எம்பி அனுமதி கடிதம் கொடுத்து பரிந்துரை செய்தார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.*

*ஆளுநராக இருக்கக் கூடிய தமிழிசை சௌந்தர்ராஜன் மட்டும்தான் அதிகப்படியான பேட்டிகளை கொடுத்து வருகிறார். மற்ற ஆளுநர்கள் இதுபோன்று பேசுவது கிடையாது. தமி*




*ழிசை சௌந்தர்ராஜனைப் பொருத்தவரை தமிழ்நாடு பா.ஜ.க. மாநில தலைவராகவே அவர் தற்போது வரை கருதிக் கொண்டு இருக்கிறார் என்றுதான் நினைக்கின்றோம்.*

*சிறையில் இருக்கக் கூடிய சிறைவாசிகளின் மன உளைச்சலைப் போக்க அவர்களது குடும்பத்தார்கள் குழந்தைகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாக உள்ளது. மன உளைச்சலில் இருந்து அவர்களை மீட்பதற்காக அவர்கள் குடும்பத்தாருடன் அதிக நேரம் பேசுவதற்கும் வீடியோ கால் மூலம் பேசுவதற்கும் வாய்ப்புகளை உருவாக்கித் தந்து மன உளைச்சலை குறைத்து அவர்கள் குடும்பத்துடன் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்றைக்கு தமிழ்நாடு சிறைத்துறை உருவாக்கித் தந்துள்ளது*

*இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி நாகசுந்தரம்
### டிசம்பர் 16 (2003)



**தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – திருச்சி மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் – தென் இந்திய நலவுரிமைச் சங்க உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**திருச்சி நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவர், தொழிற்சங்கத் தலைவர் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுப் பணியாற்றியவர்.**

**தேவிகுளம்–பீர்மேடு; மும்முனை, இந்தி எதிர்ப்பு, விலைவாசி ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது மிசாவில் ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**“கட்சிக்காக என்ன செய்தேன் என்று கேட்கின்றவர்களுடைய பட்டியலில் உள்ளவர் என்னுடைய அருமைத் தோழர், உடன்பிறப்பு நாகசுந்தரம்” என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர்கள் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 7 பயனாளிகளுக்கு ரூ.21.40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை கடனுதவியாக வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி.ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் கா.காஜா முகைதீன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் அனில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நேரு மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்.



திராவிட முன்னேற்ற கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு வருகின்ற 24.12.2023 அன்று சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, கழக முதன்மை செயலாளர்/ நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (14.12.2023) விழா முன்னேற்பாடு பணிகளை கழக நிர்வாகிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

### வெளிநாடுகளுக்கு கல்வி - வேலைவாய்ப்புக்குச் செல்பவர்களுக்கு

# முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,டிச.16-

அயல்நாடுகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காக செல்லும் தமிழர்கள் நலன் கருதி இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவ கங்கை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையம் அமைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.



தமிழர்கள் தொன்று தொட்டு வணிகம், வியாபாரம், கல்வி போன்ற காரணங்களுக் காக புலம்பெயர்ந்துள்ளனர். கால வளர்ச்சி யில் பொருளாதார காரணங்களுக்காக தமி ழர்கள், வேலை வாய்ப்பிற்காக பிற நாடுகளுக்கு அதிகளவில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டன, இவ்வாறு வேலை வாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு செல்லும் தமிழர்கள் பல்வேறு சூழ்நிலையால் சில நேரங்களில் இன்னல்களுக்கு ஆளாகின்ற னர்.

அயல்நாடுகளுக்கு பணிக்கு செல்லும் தமிழர்கள் அங்கு அவர்களுக்கு உறுதியளித் தப்படி வேலை, வேலை நேரம், ஊதியம், உணவு, உறைவிடம், போன்ற பல்வேறு விசயங்கள் தொடர்பாக ஏற்படும் பிரச்சனை களுக்கு, தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறையை தொடர்பு கொள்கின்றனர்.

அவ்வாறு அயலகத் தமிழர்களிடமிருந்து வரப்பெறும் கோரிக்கைகள் அயலகத் தமிழர் நலத்துறை மூலமாக அந்தந்த நாடுகளி லுள்ள இந்தியத் தூதரகங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தமிழ்ச் சங் கங்கள் உதவியுடன் தீர்வு காணப்பட்டு வரு கின்றன.

இது போன்ற குறைகளைச் சரிசெய்ய “கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காகத் தமி ழர்கள் புலம்பெயரும்போது, அவர்கள் செல் லும் நாட்டின் சட்டத்திட்டங்கள், கலாச்சாரம், மொழி மற்றும் வேலை தொடர்பான குறைந் தபட்ச முன் தயாரிப்புடன் செல்ல ஏதுவாக ஏற்கனவே சென்னையில் முன் பயணப் புத் தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பிற்காக தமிழ் நாட்டிலிருந்து செல்லும் இளைஞர்கள் இது குறித்து போதிய முன் அனுபவமோ போதிய தகவல்களோ இல்லா மல் செல்லும் நிலையே உள்ளது. அதுமட்டு மின்றி அவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு குறித்த விழிப்புணர்வு பெற தேவை யான முன்பயண புத்தாக்க பயிற்சி பெற நீண்ட தூரம் பயணித்தும், கூடுதல் செலவு செய்தும் சென்னைக்கு வர வேண்டிய நிலையே உள்ளது.

அரசின் நல திட்டங்கள் அனைத்தும் அவ ரவர் வசிக்கும் பகுதியிலேயே வழங்கப்பட வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் நோக்கம். இந்த அடிப்படையில் ‘முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம்’ சென்னை மட்டு மின்றி வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்பிற் காக செல்பவர்கள் அதிகம் உள்ள இராமநாத புரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மாவட்டங்களிலும் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அவ்வறிவிப்பினை நடைமுறைப்படுத்தி டும் வகையில் ரூ.54,75,000/(ரூபாய் ஐம் பத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஐந்தாயி ரம்) செலவில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையங்கள் அமைத்து தமிழ்நாடு அரசால் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையத்தில் கீழ்க்கண்ட மூன்று பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

அ)வேலைத்தேடி வெளிநாட்டிற்கு செல் லும் அனைவருக்குமான முன் பயண புத் தாக்க பயிற்சி

ஆ)கட்டிட தொழிலாளர், ஓட்டுநர், எலக்ட் ரீசியன் மற்றும் வீட்டு வேலை போன்ற பணி களுக்காக செல்பவர்களுக்கு இப்பணிகளுக் கான அடிப்படை தேவையான கல்வித் தகுதிகள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான தெளிவுகள் ஏற்படுத்துதல்.

இ) ஆங்கிலம் மற்றும் அரபு மொழி தொடர்பான அடிப்படை பயிற்சி.

மேற்காணும் பயிற்சிகளுடன் தேவைக் கேற்ப வீட்டு உபயோக மின் சாதனப் பொருட் களை கையாளுதல் போன்ற திறன் மேம் பாட்டு பயிற்சியும் அளிக்கப்படும்.

ஒன்றிய அரசாங்கத்தில் பதிவு செய்யப் பட்ட வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவர் மூலம் வெளிநாட்டு வேலைக்குத் தேர்ந்தெடுக்க ப்பட்டு, வேலைவாய்ப்பு விசா இப்பயிற்சியில் பங்கேற்கலாம். இப்பயிற்சிக் காக வழங்கப்பட்டவர்கள் உருவாக்கப்பட் டுள்ள வலைதளத்தில் (nrtamils.tn.gov.in) முகவர்கள் மூலம் பயிற்சியில் கலந்து கொள்வோர் தங்களை பதிவு செய்யலாம். மேலும் புதியதாக வேலைக்கு செல்ல விரும் பும் நபர்களும் நேரடியாக பதிவு செய்து கொண்டு பயிற்சியில் பங்கேற்கலாம்.

பயிற்சியில் கலந்து கொள்வோருக்கு முன் பயண புத்தாக்க பயிற்சி கையேடுகள் மற்றும் பயிற்சியை நிறைவு செய்தவுடன் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும், இப்பயிற்சி மையங்கள் மூலம் தமிழ் நாட்டிலுள்ள பன்னாட்டு விமான நிலை யங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் விழிப் புணர்வு காணொளிகள் மூலமாகவும் மற் றும் கிராம சபைக் கூட்டங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் அயல் நாட்டு வேலை தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தி தமிழர்கள் பாது காப்பான புலம் பெயர்தலை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் பெடரல் வங்கி கிளையை கழக துணைப் பொதுச்செயலாளரும், உயர்கல்விதுறை அமைச்சருமான முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்., மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றியக் கழகச் செயலாளர் பி.வி.ஆர்.சு. விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கள் கணேசன், ஒன்றிய நிர்வாகிகள் மோகன்ராஜ், துணைத் தலைவர் ஜோதி, நிர்மல்ராஜ், மருத்துவர் அணி டாக்டர். காவிய வேந்தன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, கிருஷ்ணராஜ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசு மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளில் அளிக்கப்பட்ட சிறப்பு பயிற்சிகளின் பலனாக தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ள 274 அரசுப் பள்ளி மாணவர்களையும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து வருகின்றார். அதன்படி கேரள மாநிலம் கண்ணூர் National Institute of Fashion Technology கல்லூரியில் இணைந்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 அரசு பள்ளி மாணவர்களையும் சந்தித்து ஊக்கம் அளித்து கல்வி உபகரணங்களையும் வழங்கினார். தொடர்ந்து கோழிக்கோடு என்.ஐ.டி. கல்லூரியில் இணைந்துள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த அரசு பள்ளி மாணவர்களையும் சந்தித்து உரையாடினார். முன்னதாக தஞ்சாவூர், திருச்சி, சென்னையில் உள்ள உயர் கல்வி நிலையங்களில் இணைந்துள்ள அரசு பள்ளி மாணவர்களை சந்தித்து கல்வி உபகரணங்களையும் வழங்கி உள்ளார்.

### கடந்த 2022ஆம் ஆண்டில் மட்டும்

# நாட்டில் 65 ஆயிரம் சைபர் குற்ற வழக்குகள் பதிவு!

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்விக்கு அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச.16-

நாட்டில் சைபர் கிரைம் குற்றங்கள் அதிகரித்துள் ளதா? மாநிலம் வாரியாக பதிவு செய்யப்பட்ட சைபர் கிரைம் வழக்குகள் அமைக் கப்பட்ட சைபர் கிரைம் செல்கள் மற்றும் சைபர் காவல் நிலையங்கள் குறித்து நாடாளுமன்ற மக்களவை யில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நாட்டில் 2020-2021-2022 ஆகிய மூன்று ஆண்டு களில் பதிவான மொத்த சைபர் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருக் கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மாநில வாரி யாக ஒவ்வொரு மாவட்டத் திலும் சைபர் கிரைம் பிரிவு களை அமைப்பதற்கு மாநில அரசுகளுடன் ஒருங் கிணைந்து செயல்பட உள் துறைக்கான நிலைக்குழு அமைச்சகத்திற்கு பரிந்து ரைத்துள்ளதா? அப்படியா னால் அதன் விவரங்கள்?

நாட்டில் நிறுவப்பட் டுள்ள சைபர் கிரைம் பிரிவு கள் மற்றும் சைபர் காவல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை மாநில வாரி யாக தெரிவிக்க வேண்டும்

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தில் துணை அமைச்சர் அஜய் குமார் மிஸ்ரா எழுத்து பூர் வமாக அளித்த பதில் விவ ரம் வருமாறு:



தேசிய குற்றப் பதிவுப் பணியகம் (NCRB)அதன் புள் ளிவிவரத் தரவுக் குற்றங் களைத் தொகுத்து “கிரைம் இன் இந்தியா” வெளியிடுகி றது. சமீபத்தில் வெளியிடப் பட்ட அறிக்கை 2022 ஆம் ஆண்டிற்கானது. என். சி.ஆர்பியால் வெளியிடப் பட்ட தரவுகளின்படி 2020 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் சைபர் குற் றங்களின் பதிவு செய்யப் பட்ட வழக்குகளின் மாநி லம்/யூடி வாரியான விவரங்கள் இணைப்பில் உள்ளன.

அதன் படி கடந்த 2020-2021-2022 ஆகிய மூன்று ஆண்டுகளில் பதிவு செய் யப்பட்ட சைபர் குற்ற வழக்குகள் நாட்டிலேயே தெலங்கானா, உத்தரப் பிர தேசம், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மிக அதிக எண்ணிக்கையில் உள்ளது. மகாராஷ்டிராவிலும் அதிக எண்ணிக்கை யில் சைபர் கிரைம் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த 2022 ஆம் ஆண்டு நாட்டில் 65,000 சைபர் கிரைம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்தி லும் சைபர் கிரைம் பிரிவு களை மாநில அரசுகளின் உள்துறையுடன் ஒருங்கி ணைக்க நிலைக்குழு பரிந்து ரைத்தது. இந்திய அரசியல மைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையின் படி காவல்துறை’ மற்றும் ‘பொது ஒழுங்கு’ ஆகியவை மாநிலங்கள் அதிகார வரம் புக்கு உட்பட்டதாகும். இந்த விவகாரத்தில் அனைத்து மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களுக்கு உள்துறை அமைச்சகம் ஆலோசனை வழங்கியுள் ளது. மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தேவைக் கேற்ப காவல் நிலை யங்களை அமைக்கின்றன.

நாட்டில் உள்ள அனைத்து வகையான சைபர் குற்றங்களையும் ஒருங்கிணைந்த மற்றும் விரி வான முறையில் கையாள்வ தற்காக இந்திய சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு மையத்தை உள்துறை அமைச்சகம் அமைத்துள் ளது. மேவாத், ஜம்தாரா, அகமதாபாத், ஹைதரா பாத், சண்டிகர், விசாகப் பட்டினம் மற்றும் குவா ஹாத்தி ஆகிய இடங்க ளுக்கு ஏழு கூட்டு இணைய ஒருங்கிணைப்புக் குழுக்கள் (ஜேசிசிடி), சைபர் கிரைம் ஹாட்ஸ்பாட்கள்/ பல அதி கார வரம்புகள் உள்ள பகு திகள் ஆகியவற்றின் அடிப் படையில்அ மைக்கப்பட் டுள்ளன. மாநிலங்கள்/யூனி யன் பிரதேசங்களின் சட்ட அமலாக்க முகவர்களி டையே ஒருங்கிணைப்பு கட்டமைப்பை மேம்படுத் துதல். 2023 இல் ஹைதரா பாத், அகமதாபாத், குவ ஹாத்தி, விசாகப்பட்டினம் லக்னோ ராஞ்சி மற்றும் சண்டிகர் ஆகிய இடங்க ளில் JCCT களுக்காக ஏழு பட்டறைகள் ஏற்பாடு செய் யப்பட்டன.

போலீஸ் ஆராய்ச்சி மற் றும் மேம்பாட்டுப் பணிய கம் (BPR&D)சைபர் செல்கள் மற்றும் சைபர் கிரைம் காவல் நிலையங்கள் பற்றிய புள்ளி விவரத் தரவைத் தொகுத்து அதன் வெளியீட் டில் “காவல் நிறுவனங்களின் தரவு” வெளியிடுகிறது. சமீ பத்திய 2022 ஆம் ஆண்டிற் கான அறிக்கை வெளியிடப் பட்டது. வெளியிட்ட தரவு களின்படி BPR&D,சைபர் செல்கள் மற்றும் சைபர் காவல் நிலையங்களின் மாநிலம்/யூடி வாரியான விவரம் உள்ளது. அதன் அடிப்படையில் நாட்டில் மகாராஷ்டிரா, பிகார், தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஹரியானா ஆகிய மாநிலங் களில் அதிக எண்ணிக்கை யில்சைபர் கிரைம் செல் அமைக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா, தமிழ் நாடு மாநிலங்களில் சைபர் கிரைம் காவல் நிலையங்கள் அதிக அளவில் அமைக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

### ஒருங்கிணைந்த மும்பை மாநில தி.மு.க. முன்னாள் செயலாளர் - மறைந்த

# த.மு.பொற்கோ இல்லத் திருமண வரவேற்பு விழா!

## கழகத்தினர் வாழ்த்துகின்றனர்!

மும்பை, டிச. 16 -

பாந்த்ராவில் வசிக்கும் மறைந்த மும்பை தி.மு.க. செயலாளர் த.மு.பொற் கோவின் மூத்த மகன் பொ.அன்பழகன் - திரு மதி சுகுணா அன்பழகன் ஆகியோரின் புதல்வி அ. அசுவினிக்கும், சென்னை யைச் சேர்ந்த தி.ச.ரமேஸ் - திருமதி கீதா ரமேஸ் ஆகி



யோரின் புதல்வர் பிரசாந்த் பாபுவுக்கும், மும்பை மாட்டுங்கா கிழக்கு பகுதி யில் உள்ள பயோனியர் மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

திருமண வரவேற்பு விழா மணமகள் வீட்டார் சார்பில் இன்று (16.12.2023 - சனிக்கிழமை) மாலை 7 மணிக்கு கொலாபா பகுதி யில் அமைந்துள்ள பாம்பே பிரிசிடென்சி ரேடியோ கிளப்பில் நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து 21.12.2023 அன்று மணம கன் வீட்டார் சார்பில் சென்னையில் அண்ணா நகரில் அமைந்துள்ள ஐ. சி.எஃப்.திருவள்ளுவர் திரு மண மண்டபத்தில் நடை பெறுகிறது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உட்பட ஏராளமான முக் கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திசிறப்பிக்கின்றனர்.

மும்பை மாநில முன் னாள் இளைஞர் அணி அமைப்பாளர் ம.சேசுராசு நன்றி கூறுகிறார்.

### இளையான்குடி அருகே கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கை!

# குண்டு குளத்தில் புதிய டிரான்ஸ்பார்மர்!

## ஆ.தமிழரசி எம்.எல்.ஏ. இயக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 16 -

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி தாலுகா குண்டுகுளம்மற்றும்சுற்றுப்புற கிராமங்களில் நீண்ட நாளாக குறைந்த மின் சப்ளை இருந்து வந்தது. இதனால் மாணவ மாணவிகள்படிப்பதற்கும்விவ சாயிகளும் மிகவும் சிரமப் பட்டார்கள். குண்டு குளம் மற் றும்அதனைசுற்றியுள்ளகிராம மக்கள்திருமதிதமிழரசிசிரவிக் குமார் எம்.எல்.ஏவிடம் குறைந்த மின்சப்ளை வருவதா கவும் புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்து தருமாறு மனு கொடுத்தார்கள். அந்த மனு வின் பேரில்குண்டு குளத்தில் புதியடிரான்ஸ்பார்மர் அமைத் திடு மாறு மின்வாரிய அதிகாரி களுக்கு எம்.எல்.ஏ. பரிந்துரை செய்தார். அதன்படி குண்டு குளத்தில்புதியடிரான்ஸ்பார்மர் அமைக்கப்பட்டது.

புதிய ட்ரான்ஸ்பார் மரை திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. தலைமையேற்று இயக்கி வைத்தார்.

இந்தநிகழ்ச்சியில்முன்னால் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், இளையான்குடி பேரூராட்சி மன்றதலைவர்பி.ஏ.நஜ்மூதீன், ஊராட்சி மன்ற தலைவர் நாக ஜோதி சேகர், விவசாய அணி காளிமுத்து, மின்வாரிய அதிகா ரிகள்ஜான்சன்,கென்னடி,சிவக் குமார், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இப்ராகிம், இளைஞரணிபைரோஸ்கான், முருகன், பாலவேல், ஜெயின் அலாவுதீன், தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன் மற்றும் குண்டு குளம் கிராம மக்கள் சுற் றுப்புற கிராம மக்கள் கலந்து கொண்டார்கள். நீண்ட நாள் கோரிக்கையானடிரான்ஸ்பார் மரை புதிதாக அமைத்து தந்த தற்கு குண்டுகளாக கிராம மக் கள்முதல்வருக்கும்,சட்டமன்ற உறுப்பினருக்கும் நன்றி தெரி வித்தார்கள். வண்ணார்கண் மாய்பகுதியில்தூர்வாரும்பணி யினை தமிழரசி எம்.எல்.ஏ. ஆய்வு செய்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நேரடி நியமன முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஆ. ராமு மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு நேரடி நியமன முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கு. தியாகராஜன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்கள். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.12.2023) தலைமைச் செயலகத்தில், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச் செயலாளர் இரா. தாஸ் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி உறுப்பினர்களின் ஒருநாள் ஊதியத்தை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தை வழங்கினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (15.12.2023) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து, சென்னை, காமராசர் அரங்கத்தில் 1.1.2024 அன்று நடைபெறவுள்ள "மகா கவிதை" நூல் வெளியீட்டு விழாவிற்கான அழைப்பிதழையும், நூலினையும் வழங்கினார். உடன் அவரது மகன்கள் மதன்கார்க்கி, கபிலன் வைரமுத்து ஆகியோர் உள்ளனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், அம்முண்டி ஊராட்சியில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2023–2024 ஆம் ஆண்டுக்கான கரும்பு அரைவையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி நேற்று முன்தினம் (14.12.2023) தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி அமலு விஜயன், ஜே.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு. பாபு, கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் திருமதி கு.நர்மதா, காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், காட்பாடி 1 வது மண்டல குழு தலைவர் திருமதி புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி ஒன்றிய குழு துணைத்தலைவர் சரவணன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கவிதா மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், ஆலை நிர்வாகிகள், விவசாய பெருமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.






# உடன்பிறப்பே... 36

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த நன்னிலம் நடராசன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## நன்னிலம் நடராசன்: நகைச்சுவையால் கொள்கை ஊட்டியவர்!

“பெரியோர்களே, தாய்மார்களே.. நண்பர்களே.., இளைஞர் அணியைச் சேர்ந்த தம்பிமார்களே...” என ஒரு கரகரத்த குரல் மெல்லிய ஓடைபோல கழக மேடைகளில் ஒலிக்கத் தொடங்கும். தொண்டர்கள் சிரிப்பலைகளை எதிர்பார்த்திருக்கும் நேரத்தில் அவரது பேச்சு, வாகனத்தின் உச்ச வேகத்தைபோல ஏறும். தொண்டர்கள் சிரித்து மாள்வார்கள். முதல்முறையாக அந்தப் பேச்சைக் கேட்பவர்கள் கிறங்கிய தேனீயாகத் திளைப்பர்.

கழக மேடைகளில் கலைஞர், பேராசிரியர் எனத் தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துவார்கள். அல்லது தலைமைக் கழக நிர்வாகிகள் செல்வார்கள். அதற்கு முன்னர் தொண்டர்களைத் தயார்படுத்துவது, தலைவர்கள் வரும் வரை அவர்களைச் சோர்வடையாமல் உற்சாகமாக வைப்பது என மேடைகளைத் தன்வசப்படுத்துவது கழக முன்னணி தளகர்த்தர்களின் வழக்கம். அப்படி மேடைகளைத் தன்வசம் செய்த முன்னணிக் கள வீரர்களில் ஒருவர்தான், நன்னிலம் நடராசன்.

“இளமைப் பருவம் முதல் இறுதி நாள் வரை கழகத்தின் கொள்கை முழக்கம் செய்தவர். தன்னுடைய நகைச்சுவைப் பேச்சால் தமிழகத்தின் பட்டித்தொட்டியெங்குமுள்ள கழகத் தோழர்களின் அன்பைப் பெற்றவர்” என கழகம் போற்றிய தளகர்த்தர், அண்ணாவின் தம்பி, முத்தமிழறிஞர் கலைஞரின் அன்புக்குரிய உடன்பிறப்பு, இந்த நன்னிலம் நடராசன்.

### நகைச்சுவைப் பேச்சாளர்

நெற்களஞ்சியம் என உணவுப் படியளக்கும் டெல்டா மாவட்டங்களில் ஒன்றான திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் வட்டத்திலுள்ள அபிவிருத்தீசுவரம் கிராமத்தில் பிறந்தவர் நன்னிலம் நடராசன். தந்தை அண்ணாசாமி அவர்களுக்கும், தாயார் தனபாக்கியம் அவர்களுக்கும் 1928-ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதி பிறந்தவர் நடராசன்.

இளம் வயதிலேயே அரசியல் ஆர்வம் கொண்டிருந்தவர், அந்தப் பகுதியில் தீவிரமாகப் பரவிக் கொண்டிருந்த திராவிடர் கழகச் செயல்பாடுகளில் ஆர்வம் கொண்டு, ஈடுபடத் தொடங்கினார். இயல்பிலேயே நகைச்சுவை உணர்வு கொண்டிருந்த நடராசன், தனது பேச்சுக்களில் அரசியல் கருத்துகளைப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்.

திராவிடர் கழகம், திருவாரூர், கலைஞர் என சுழலத் தொடங்கிய அவரது வட்டம், திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதும், அதில் இணைந்து சுற்றத் தொடங்கியது. அவரது சொந்த ஊரில் சைக்கிள் கடை வைத்து தொழிலைச் செய்தவர், கழக மேடைகளில் பம்பரமாகச் சுற்றத் தொடங்கினார்.

### நாவன்மையும் நடை வன்மையும்

கழகம் எனும் ஆலமரத்தின் அடிவேர்களில் ஒன்றாக விளங்கிய நன்னிலம் கிளைக் கழகத்தைக் கட்டிக் காக்க, செயலாளர் பொறுப்பினை ஏற்று இருபது ஆண்டுகள், நன்னிலம் வட்டத்தில் கழகத்தை ஆல் போல் வளர்த்தார். அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் அவர் கால்படாத ஊர்களே இல்லை எனும் அளவுக்குக் கழகம் வளர்த்தவர்.

தி.மு.கழகம் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் பங்கேற்றவர் நடராசன். நெருக்கடி நிலை காலத்தில் ஜனநாயகம் காத்திட, மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைக் கொடுமையை அனுபவித்தார்.

பெயர் அறியாத சிற்றூர்களுக்கும், கால்நடையாக நடந்து சென்று கழகக் குரலைக் கடத்தியவர் நடராசன். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் எழுதியதையும் பேசியதையும் பாமர மக்களுக்கு இன்னும் எளிமையாக, தனது



ஓவியம் : ரவி பேலட்

**இயல்பான தஞ்சை மாவட்ட மொழிநடையில் நகைச்சுவை ததும்ப அவர் நிகழ்த்திய கொள்கைச் சமர், காலத்தால் நிலைத்து நிற்பவை.**

நகைச்சுவையான பேச்சுத் திறனால் கொண்டு சேர்த்தவர். கழகத்தை மேடைகளில் பேசியே வளர்த்த பெருமைக்குரியவர்களில் ஒருவராக விளங்கியவர் நன்னிலம் நடராசன். அவரது மேடை ஆளுமையே நடராசனுக்கு, ‘நன்னிலம் நடராசன்’ என அடைமொழியைக் கொண்டு வந்தது.

“நாவன்மை படைத்த நன்னிலம் நடராசன் தமிழகத்தின் நகரங்களில் மட்டுமல்ல, பட்டி தொட்டிகளில் கழகக் கொள்கைகளை மேடை தோறும் முழங்கி வந்தவர். படித்தவர்கள் மட்டுமல்ல, பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் நகைச்சுவையோடு பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்” என கலைஞரால் புகழப்பெற்றவர்.

### சன்மானமும் கடன்காரர்களும்

எந்தச் சோதனைகள் வந்தாலும் சோர்வு காணாத உள்ளம் கொண்டவர். சட்டமன்றத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மக்கள் மன்றத்திலேயே தமது பணியினைத் தொய்வின்றி ஆற்றி வந்தவர். அவர் ஏற்றுக் கொண்ட இயக்கம் தி.மு.கழகம். அவர் நெஞ்சார ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் கலைஞர் என நின்ற தளகர்த்தர் நடராசன்.

எதையும் எதிர்பார்க்காத இவரது தியாகத்தைப் பாராட்டிப் போற்றும் வகையில், 1991-ஆம் ஆண்டு கழகத்தின் முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘கலைஞர் விருதினை’ தலைவர் கலைஞர் அவர்கள் கரங்களாலேயே வழங்கிச் சிறப்பித்தார்.

கழகத்தின் கொள்கைப்பரப்பு இணைச் செயலாளராகச் சுழன்ற நன்னிலத்தாருக்கு, 1999-ஆம் ஆண்டு ‘பெரியார் விருது’ அளிக்கப்பட்டது. அப்போது பேசிய தலைவர் கலைஞர் அவர்கள், விருதுடன் ஒரு லட்சம் ரொக்கத் தொகை அளிக்கப்படுகிறது என அறிவித்தார். விருது பெற்றதும் பேசிய நன்னிலம் அவர்கள், “தலைவர் எனக்கு விருதுடன் பணம் அளிப்பதை மேடையிலேயே சொல்லிவிட்டார். இதைக் கேட்டதும், நாளை என் வீட்டு வாசலுக்குக் கடன்காரர்கள் வந்து நிற்பார்கள். அதனால் நான் ஊருக்குப் போவதா, சென்னையிலேயே தங்கி விடுவதா என யோசனையில் இருக்கிறேன்” என தனது நகைச்சுவைப் பேச்சால் கலைஞரையே கட்டிப்போட்டவர்.

### மருத்துவமனை தங்காத மனம்

அவர் கடைசியாகக் கலந்துகொண்ட கூட்டம், 2002 ஜனவரி 25-ஆம் தேதி, ஒரத்தநாட்டில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் நினைவுக்கூட்டம். அவர் கலந்து கொண்ட கடைசித் திருமண நிகழ்வு, இன்றைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்களுடையது. கழகம், கலைஞர், கழக மேடைகள், கோடானகோடி கழகத் தொண்டர்களின் கரவொலி, சிரிப்புமழை என நிம்மதி கொண்டவர் நடராசன்.

சிறிது உடல் நலம் குன்றி இருந்தவர், 2002 மார்ச் மாதம் 12-ஆம் தேதி இயற்கையில் கலந்தார். அதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர், உடல்நலம் குன்றிய நிலையில் அண்ணா அறிவாலயம் வந்து, கலைஞரைச் சந்தித்தார். கலைஞர் அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வைத்து சிகிச்சையில் சேர்த்தார். ஆனால், நன்னிலமோ எல்லாம் சரியாகிவிடும் என மருத்துவமனையில் இருந்து சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டார். அதையறிந்து கலைஞர் அவரது ஊருக்கு போன் செய்து கடிந்து கொள்கிறார். இப்படித் தலைவன் - தொண்டன் உறவினைக் கொண்டிருந்த கொள்கைத் தங்கம் என, அவர் குருதியில் கொண்டிருந்த கழக உணர்வை, கலைஞரைச் சந்தித்து ஆற்றுப்படுத்திக் கொண்ட நிகழ்வை, அவர் மறைவின்போது கலைஞர் எழுதிய இரங்கல் குறிப்பு துயர காவியமாகத் துக்கம் கொண்டிருந்தது..

“நன்னிலம் என்றாலே நன்னிலம் நடராசன் என்று பெருமை சேர்த்த கொள்கைத் தங்கம் மறைந்துவிட்டார்” என கலைஞர் அவரது குரலில் ஓர் இரங்கற்பா வெளியிட்டார். இயல்பான தஞ்சை மாவட்ட மொழிநடையில் நகைச்சுவை ததும்ப அவர் நிகழ்த்திய கொள்கைச் சமர், காலத்தால் நிலைத்து நிற்பவை. அவற்றைக் காத்து வைக்கும், கழகத்தின் வீரர் சபை.

**...துடிக்கும்**

## தகவல்களின் முழுமை!

சமூக ஊடகங்கள் செய்திகளைத் தருபவை அல்ல. அவை தருவது எல்லாம் வெறும் தகவல்கள். அந்தத் தகவல்களில் இப்போது இன்னொரு பரிமாணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுதான் ‘செர்ரி பிக்கிங்’ என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும், அரைகுறை தகவல்கள். அதாவது, ஒரு நிகழ்வு பற்றிய செய்தியிலிருந்து முழுமையான தகவல்களைத் தராமல், தங்கள் அரசியலுக்குத் தோதான சில விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு கம்பு சுற்றுவது.

அதற்கு மிகச்சிறந்த உதாரணம், சபரிமலைக்குச் சென்றுவிட்டு, தனது தந்தையைக் காணவில்லை என்று கதறிய சிறுவனின் வீடியோ. இணையத்தில் வைரலாகி வரும் அந்தக் காட்சி மூலம், கேரள கம்யூனிஸ்ட் கட்சி, இந்துக்களுக்கு எதிராகச் செயல்படுகிறது என்று வதந்தி பரப்பப்படுகிறது.

ஆனால், உண்மையில் நடந்தது என்ன? சபரிமலைக்கு அப்பாவுடன் வந்த மகன், ஒருகட்டத்தில் அப்பாவைக் காணவில்லை என்று அழ, அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த காவலர்கள், அவனது தந்தையைக் கண்டுபிடித்து அவரிடம் பையனை ஒப்படைக்கிறார்கள். இவை அனைத்தும் அங்கிருந்த ஒருவர் எடுத்த வீடியோவில் பதிவாகியுள்ளது. ஆனால், உண்மைத் தன்மையை அறியாமல் வீடியோவின் ஒரு பகுதியை மட்டும் வெட்டி வதந்தி பரப்பப்படுகிறது. இதுவும் ஒரு வகையில் பொய்ச் செய்திதான் என்றாலும், இதர பொய்ச் செய்திகளை விடவும் மிகவும் ஆபத்தானது. ஏனென்றால், இது செய்தி எனும் முலாமைப் பூசிக் கொண்டு வருகிறது. எனவே சமூக ஊடக நுகர்வில் கவனம் தேவை!

## :ப்ளாஷ்பேக்



## வாழ்த்தும் பொற்கிழியும்!



சிதம்பரம்

1976-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ‘மிசா வழக்கு நிதி’ சேகரிக்க, மதுரைக்கு வருகை தந்த போது சமயநல்லூர் கிளைக் கழகம் சார்பாக, தலைவரிடம் வழக்கு நிதி வழங்கி வாழ்த்துப் பெற்றேன். இன்றைக்கு என்னுடைய வயது 82. தலைவர் கலைஞரின் பேரன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையால் பொற்கிழி பெற்றபோது பழைய நினைவுகள் எல்லாம் என் மனதில் நிழலாடுகின்றன.

**-எஸ்.சிதம்பரம், அவைத் தலைவர், சமயநல்லூர் கிளை, மதுரை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மருத்துவக் கல்வி மறுமலர்ச்சிக்கு நூறாண்டு!

**1923-ஆம் ஆண்டு நீதிக்கட்சி இரண்டாவது முறையாக வெற்றி பெற்று, மதராஸ் மாகாணத்தின் முதலமைச்சராக பனகல் அரசர் மீண்டும் பொறுப்பேற்றவுடன், மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தேவை என்ற கட்டுப்பாட்டினைத் தகர்த்தார். சென்னையில், முதன்முதலாக இந்திய மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தியவரும் அவர்தான். அவற்றின் மூலம் தமிழ் மாணவர்கள் மருத்துவக் கல்வி பயில்வதில் மறுமலர்ச்சி உருவானது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 330




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131